ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

புரட்டாசி

செப்டம்பர் - 1979



விலை ரூ-1

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர் :: சென்னை-600 00

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச் சாந்தியைத் தரும் அருமருந்தாக இப்பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்கவேண்டிய பத்திரிகை இது.

சந்தா விவரம்

வருட சந்தா (சிறப்பு மலர் உட்பட)	ரூ. 10
ஆயுள் சந்தா	ரூ. 125
தனிப் பிரதி	ரூ. 1

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ. 10 ஆகவோ செலுத்தலாம்.

ஆயுள் சந்தாதாரர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வருட சந்தாதாரர்கள், தாங்கள் செலுத்தியுள்ள வருட சந்தாவைக் கழித்து மீதம் உள்ள தொகையைச் செலுத்தி, ஆயுள் சந்தாதாரராகத் தங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

ஒரு வேண்டுகோள்

1. பேரன்பிற்குரிய வாசக அன்பர்கள் தங்களின் சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் தமது நண்பர்கள் சிலரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். இதன் மூலம் நமக்கும் மற்றவர்களுக்கும் நாம் நன்மையைச் செய்துகொள்கிறோம்.

2. சந்தாதாரர்களை அதிகப்படுத்துவதில் எங்களால் இயன்ற முயற்சி செய்து வருகிறோம். அன்பர்கள் தங்களின் பங்காக இந்தத் தெய்விகக் கைங்கரியத்தில் கல்வி ஸ்தாபனங்கள், சத்சங்கங்கள் முதலியவைகளுக்குப் பத்திரிகை போய்க் கொண்டிருக்கும்படி செய்யலாம். இது ஒவ்வொரு மாதமும் தாங்கள் அளிக்கும் மேலான நன்கொடையாகவும், தங்களை ஞாபகப் படுத்தும் சிறந்த வெகுமதியாகவும் அமையும்.

3. பெரியோர்கள் இந்த வேண்டுகோளைத் தங்களுக்கு ஏதோ சம்பந்தமில்லாதது என்று புறக்கணித்துவிடாமல், மேலும் சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம். குறைந்தது மூன்று சந்தாதாரர்களை யாவது சேர்த்துத் தருவது மிகப் பெரிய உபகாரமாக இருக்கும். இதன் மூலம் இன்றைய சமுதாயத்தின் சூழ்நிலையில் நல்ல கருத்துகள் வளர அரும்பெரும் தொண்டு செய்தவர்களாகிறீர்கள்.

4. புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பி வைக்கும்போது, புதிய சந்தா என்று குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பழைய சந்தா தாரர்கள், தமது கடிதப் போக்குவரத்துகள் எல்லாவற்றிலும் சந்தா எண்ணையும் முழு விலாசத்தையும் அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டுகிறோம்.

விவரங்களுக்கு :

தொலைபேசி : 71231

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் : சென்னை-600 004

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தொகுதி—59 || செப்டம்பர் 1979 || இதழ்—9

பொருளடக்கம்

ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்வையும் வாக்கையும் விளக்கும் நிரந்தரக் கண்காட்சி நிலையம்

ஒரு வேண்டுகோள்

நவீன இந்தியாவின் ஒப்பற்ற ஞானதீபமாக பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் விளங்குகிறார். கீழை நாடுகளில் தோன்றிய மதங்களில் ஈடுபாடு கொண்டுள்ள இந்தியர்களும் மேலைநாட்டவர்களும் ஸ்ரீராமகிருஷ்ணரைக் குறித்து நன்கு அறிவார்கள் என்பதை விளக்கவேண்டிய அவசியமே இல்லை.

ஸ்ரீராமகிருஷ்ணரின் பெயர் பாரதநாட்டில் வீடுதோறும் பரவி வருகிறது. அது மட்டுமின்றி அவரது வாழ்வும் வாக்கும், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பல மற்றும் உலக நாடுகளிலும் பரவியபடியே இருக்கிறது. பிரெஞ்சு நாட்டுப் பேரறிஞர் ரொமெயின் ரோலண்ட் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றி "முப்பது கோடி மக்களின் ஈராயிரமாண்டு ஆன்மிக வாழ்க்கையின் முழுநிறைவு" என்று குறிப்பிட்டார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் வாழ்ந்த தெய்விக வாழ்க்கை பண்டைய பாரதத்தின் முதிர்ச்சி பெற்ற ஆத்மஞானத்தின் சிறிய ஓர் உருவம் போன்று திகழ்கிறது. அவர் தமது ஆழ்ந்த ஆன்மிக அனுபவங்களின் அடிப்படையில் மிகவும் எளிய முறையில் உபதேச மொழிகளை வழங்கியுள்ளார். அவரது அனுபவங்களும் எளிய முறையில் அமைந்த உபதேசங்களும் ஆயிரமாயிரம் மக்களை அவர்பால் ஈர்த்து வருகிறது. இந்த உண்மைக்கு பேலூர் மடத்திலுள்ள ஸ்ரீராமகிருஷ்ணர் ஆலயத்திற்கு நாள்தோறும் வருகை தந்து கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டமே சான்றாக விளங்குகிறது.

ஸ்ரீராமகிருஷ்ண மடம்-சங்கம் ஆகியவற்றின் தலைமை நிலையமாக விளங்கும் பேலூர் மடத்திற்கு வருகை புரியும் மக்களுக்குப் பயன்படும் வகையில், நிரந்தரமாகவே ஓர் அழகிய கண்காட்சி நிலையத்தை அமைக்க வேண்டும் என்ற யோசனை பல காலமாக இருந்து வந்தது. அதற்கிணங்க இப்போது உருவாகி வருவதுதான் ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்வையும் வாக்கையும் விளக்கும் நிரந்தரக் கண்காட்சி நிலையமாகும். இந்த அரிய கண்காட்சி நிலையம் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றியும், ஸ்ரீராமகிருஷ்ண மடம்-சங்கம் ஆகியவற்றின் பணிகள் கோட்பாடுகள் பற்றியும், சுருக்கமாகவும் தெளிவாகவும் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் அமைய இருக்கிறது. இந்த உன்னத கண்காட்சி நிலையத்தில் சித்திரங்களும் வண்ணப்படங்களும் சிறப்பாக இடம்பெறும். அவற்றுக்குக் கீழே ஆங்கிலம், இந்தி, வங்காளம் ஆகிய மூன்று மொழிகளில் விளக்க உரைகளும் தரப்படும்.

இதன் பொருட்டு 2000 சதுர அடிகளைக் கொண்ட நிலத்தில் எழிலார்ந்த கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. கட்டிடத்தைக் கட்டி முடிக்கவும் கண்காட்சி நிலையத்தை உருவாக்கவும் சுமார் 1½ இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பல தலைமுறையினருக்கும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கும் பயன்படப் போகும் இந்த ஆன்மிகக் கண்காட்சி நிலையத்தை உருவாக்கத் தாராளமாகப் பொருளுதவி புரிந்து இறையருளுக்குப் பாத்திரர்களாகும்படி, பொதுமக்களையும் ஆன்மிக ஈடுபாடு கொண்ட அன்பர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த அரிய பணிக்கு ரூ. 250க்குப் மேல் தரப்படும் நன்கொடை அனைத்திற்கும் வருமான வரிவிலக்குச் சலுகை உண்டு. காசோலை (Cheque) எழுதப்பட வேண்டிய, மற்றும் நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி வருமாறு :

Secretary
Ramakrishna Mission Saradapitha
P. O. Belur Math, Dist Howrah
West Bengal: Pin-711 202

தர்மத்தின் தொண்டில் தங்களன்பிற்குரிய
சுவாமி ஸ்மரணானந்தர்
செயலாளர்

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

—திருமூலர்

தொகுதி 59 | சித்தார்த்தி ௵ புரட்டாசி ௴ | இதழ் 9

பிரார்த்தனை

कलाभ्यां चूडालङ्कृतशशिकलाभ्यां निजतपः फलाभ्यां भक्तेषु प्रकटितफलाभ्यां भवतु मे ।
शिवाभ्यामस्तोकत्रिभुवनशिवाभ्यां हृदि पुनर्भवाभ्यामानन्दस्फुरदनुभवाभ्यां नतिरियम् ॥

கலாப்யாம் சூடாலங்க்ருத-சசிகலாப்யாம் நிஜதப:
பலாப்யாம் பக்தேஷு ப்ரகடித-பலாப்யாம் பவது மே |
சிவாப்யா-மஸ்தோக-த்ரிபுவந-சிவாப்யாம் ஹ்ருதி புநர்
பவாப்யா-மாநந்த-ஸ்புர-தநுபவாப்யாம் நதிரியம் ||

—சிவானந்த லஹரீ

கலை வடிவாகியவர்களும், சந்திரக்கலையைத் தலையில் அணிந்தவர்களும், ஒருவருக்கொருவர் தவத்தின் பயன் வடிவாகியவர்களும் அடியார்களிடத்தில் அருள் பயனை விளங்கச் செய்பவர்களும், மூவுலகிற்கும் குறைவற்ற மங்களங்களை அருள்பவர்களும் இதயத்தில் நினைக்குந்தோறும் புதிதுபுதிதாய்த் தோன்றுபவர்களும், ஆத்மானுபவத்தால் ஆனந்தக் களிப்புடையவர்களும் ஆகிய சிவசக்தி ஐக்கிய வடிவினருக்கு என்னுடைய இந்த நமஸ்காரம் உரியதாகட்டும்.

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீஇருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரிவாய் பொன்னம்பலத்(து) எம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்நின்றே.

—திருவாசகம்



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

ஒரு பக்தர்: எது சிறந்தது சுவாமி? ஞானம் கலந்த பக்தியா, அல்லது பிரேமை பக்தியா?

ஸ்ரீராமகிருஷ்ணர்: பகவானிடம் ஆழ்ந்த அன்பு உண்டானுலன்றிப் பிரேமைபக்தி ஏற்படாது. மேலும், பகவான் எனக்குச் சொந்தமானவர்தாம் என்ற உணர்ச்சியும் தீவிரமாக இருக்க வேண்டும்.

ஒரு கதை சொல்கிறேன், கேளுங்கள். மூன்று நண்பர்கள் சேர்ந்து காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தார்கள். திடீரென்று ஒரு புலி வந்து விட்டது. அவர்களில் ஒருவன், "சகோதரர்களே, நாம் செத்தொழிந்தோம்!" என்று சொன்னுன். இரண்டாவது நண்பன், "நீங்கள் ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? நாம் எதற்காகச் செத்தொழிய வேண்டும்? வாருங்கள், நாம் அனைவரும் சேர்ந்து பகவானிடம் பிரார்த்தனை செய்யலாம்" என்று சொன்னுன். மூன்றுவது நண்பனே, "வேண்டாம், பகவானை நாம் ஏன் கஷ்டப்படுத்த வேண்டும்? வாருங்கள், இந்த மரத்தின்மீது ஏறிக்கொள்ள லாம்" என்று சொன்னுன்.

'நாம் செத்தொழிந்தோம்' என்று சொன்னவன் 'பகவான் இருக்கிறர். அவர் நம்மைக் காப்பாற்று வார்' என்ற உண்மையை அறிந்திருக்கவில்லை. 'வாருங்கள், நாம் அனைவரும் சேர்ந்து பகவானிடம் பிரார்த்தனை செய்யலாம்' என்று சொன்னவன் ஞானி ஆவான். படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றையும் செய்பவர் பகவான்தாம் என்பதை அவன் அறிந்திருந்தான். 'பகவானை நாம் ஏன் கஷ்டப்படுத்த வேண்டும்? வாருங்கள், இந்த மரத்தின் மீது ஏறிக்கொள்ளலாம்' என்று சொன்ன வன் இருக்கிறனே, அவனுடைய உள்ளத்தில்தான் பிரேமைபக்தி உதித்திருந்தது. தன் அன்புக்கு உரிய பகவானைவிடத் தனக்கு அதிக வலிமை இருப்பதாகக் கருதுவது பிரேமை பக்தியின் இயல் பாகும். தன் அன்புக்கு உரிய பகவானுக்கு எந்த விதக் கஷ்டமும் ஏற்படக்கூடாது என்று எச்சரிக்கையுடன் பார்த்துக் கொள்ளும் இயல்பு அது தான் அன்பு செலுத்தும் பகவானின் காலில் ஒரே ஒரு சிறிய முள்கூடத் தைத்துவிடாமல் கவன மாகப் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பது ஒன்று தான் பிரேமை பக்தி கொண்டவனுக்கு வாழ்க்கையி லுள்ள ஒரே ஆசையாகும்.

வியாழக்கிழமை, அக்டோபர் 29, 1885

இன்று காலை சுமார் பத்து மணி இருக்கும். நோய்வாய்ப்பட்ட குருதேவர் இப்போது சியாம்பு கூரில் தங்கியிருக்கிறர். ஸ்ரீராமகிருஷ்ணருக்குச் சிகிச்சை செய்து வந்த டாக்டர் சர்க்காரின் வீடு கல்கத்தாவில் சங்காரிதோலா என்ற இடத்தில் இருந்தது. குருதேவரின் அன்றாட உடல் நிலையைப் பற்றித் தெரிவிப்பதற்காக ம—ஒவ்வொரு நாளும் டாக்டர் சர்க்காரின் வீட்டுக்குச் செல்ல வேண்டி யிருந்தது. இன்றைய தினமும் ம—குருதேவரின் நிலைமையை அறிவிப்பதற்காக டாக்டரின் வீட்டுக்கு வந்திருந்தார். இருவரும் உரையாட ஆரம்பித்தனர்.

டாக்டர்: டாக்டர் பீகாரி பாதுரி திரும்பத் திரும்ப ஒரு விஷயத்தைப் பற்றியே சொல்லிக் கொண்டிருக்கிறர். அதாவது 'கொதே (Goethe) யின் ஆவி அவருடைய உடலிலிருந்து வெளியே வந்தது; அதை கொதே தாமே பார்த்தார்' என்று அவர் சொல்கிறர். என்ன ஆச்சரியமான செய்தி இது!

ம—: இப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதனுல் நமக்கு என்ன பிரயோ ஜனம் என்கிறர் பரமஹம்சதேவர். பகவானிடம் பக்தியை வளர்த்துக்கொள்ளப் பாடுபடுவதற் காகவே நாம் இந்த உலகில் பிறந்திருக்கிறேம். ஸ்ரீராமகிருஷ்ணர், 'மாம்பழம் சாப்பிட ஒருவன்

மாந்தோப்புக்குச் சென்றான்' என்று ஒரு கதையை அடிக்கடி சொல்லுவது வழக்கம். மாம்பழம் சாப்பிடும் நோக்கத்துடன் மாந்தோப்புக்குள் சென்ற அவன், மாம்பழத்தைச் சாப்பிடாமல் ஒரு காகிதத்தையும் பென்சிலையும் வைத்துக்கொண்டு அந்தத் தோப்பில் எத்தனை மரங்கள் இருக்கின்றன, எத்தனை கிளைகள் இருக்கின்றன, எத்தனை இலைகள் இருக்கின்றன என்றெல்லாம் எண்ணி எண்ணிக் கணக்கெடுத்து எழுத ஆரம்பித்தான். அப்போது அவனை அந்த நிலையில் பார்த்த மாந்தோப்பைச் சேர்ந்த வேலைக்காரன் ஒருவன், "நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்? எதற்காக இங்கு வந்தாய்?" என்று அவனைக் கேட்டான். அதற்கு அந்த மனிதன், "நான் மாம்பழங்களைச் சாப்பிடுவதற்காக இங்கு வந்தேன். இப்போது நான் இங்குள்ள மரங்கள் எத்தனை, கிளைகள் எத்தனை என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்" என்று சொன்னான். அதைக் கேட்ட தோட்டக்காரன், "நீ பழம் சாப்பிட வந்திருந்தால் பழத்தைச் சாப்பிட்டுவிட்டுப் போ. எத்தனை மரங்கள், கிளைகள், இலைகள் என்று எண்ணிக் கணக்கு எடுத்துக்கொண்டிருப்பதனால் உனக்கு என்ன லாபம்?" என்று கேட்டான்.

டாக்டர்: பரமஹம்சர் சாரத்தை மட்டும் கிரகித்து எடுத்துக்கொள்கிறார் என்று தெரிகிறது.

அதன் பிறகு டாக்டர் சர்க்கார் தமது ஹோமியோபதி மருத்துவமனை சம்பந்தமாகப் பல விஷயங்களைப் பற்றி ம—வுடன் பேசிக்கொண்டிருந்தார். ஒவ்வொரு நாளும் எத்தனை நோயாளிகள் வருகிறார்கள் என்பதை அறிவிக்கும் பட்டியலை ம—வுக்கு அவர் காட்டினார். தாம் ஹோமியோபதி மருத்துவம் பழக ஆரம்பித்த ஆரம்பகாலத்தில் பல டாக்டர்கள் தமக்கு ஊக்கம் தரவில்லை என்றும், அதோடு மட்டுமின்றி அந்த டாக்டர்கள் தமக்கு எதிராகவும்கூடப் பத்திரிகைகளில் எழுதியதாகவும் டாக்டர் சர்க்கார் ம—விடம் தெரிவித்தார்.

டாக்டர் சர்க்கார் தமது வண்டியில் ஏறிக்கொண்டார். ம—வும் அவருடன் அந்த வண்டியில் ஏறினார். போகும் வழியில் டாக்டர் சர்க்கார் சோர்பகான், மாதா கோசார்கோலி, பதுரியா காட்டார் ஆகிய இடங்களில் இருந்த பல நோயாளிகளை அவர்களின் வீடுகளுக்குச் சென்று பார்த்தார். நோயாளிகளைப் பார்த்து முடித்ததும் அவர் குருதேவரைக் காணச் செல்ல வேண்டும். பாத்துரிய கட்டாவில் டாகுர் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வீட்டிற்கு அவர் சென்றார். அங்கே குடும்பத் தலைவரால் காலதாமதம் ஏற்பட்டது. வண்டிக்குத் திரும்பி வந்ததும் ம-வுடன் பேச ஆரம்பித்தார்.

டாக்டர்: இந்த வீட்டின் தலைவருடன் பரமஹம்சரைக் குறித்து நான் பேசிக்கொண்டிருந்தேன். அத்துடன் தியாசபி பற்றியும் கர்னல் ஆல்காட் பற்றியும் நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். பரமஹம்சர் இந்த வீட்டுத் தலைவரின்மீது கோபம் கொண்டிருக்கிறார். அதற்கு என்ன காரணம் தெரியுமா? 'எனக்கு எல்லாம் தெரியும்' என்று இந்த வீட்டின் தலைவர் கூறினாராம்.

ம—: அப்படி இல்லை. இந்த வீட்டின் தலைவரின் மீது குருதேவர் ஏன் கோபம் கொள்ள வேண்டும்? ஒரு சமயம் இந்த வீட்டுக்காரர் குருதேவரைச் சந்தித்தார் என்று கேள்விப்பட்டேன். அப்போது பரமஹம்சதேவர் கடவுளைக் குறித்து இவருடன் பேசியிருக்கிறார். உடனே இந்த வீட்டின் தலைவர், 'ஓ! இதெல்லாம் எனக்குத் தெரியும்!' என்று சொன்னாராம்.

டாக்டர்: இந்த வீட்டுக்காரர் விஞ்ஞானக் கழகத்திற்கு முப்பத்திரண்டாயிரத்தைந்நூறு ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார்.

வண்டி தொடர்ந்து சென்றுகொண்டிருந்தது. டாக்டர் சர்க்கார் ஸ்ரீராமகிருஷ்ணரின் நோயைப் பற்றியும், அவரைப் பாதுகாக்க வேண்டிய வகையைப் பற்றியும் ம—வுடன் பேச ஆரம்பித்தார்.

டாக்டர்: அவரை நீங்கள் தட்சிணேசுவரத்திற்கு மீண்டும் திருப்பி அனுப்புவதாக இருக்கிறீர்களா?

ம—: இல்லை. அது பக்தர்களுக்குப் பெரிதும் அசௌகரியத்தை உண்டுபண்ணும். அவர் கல்கத்தாவிலேயே தங்கியிருந்தால் பக்தர்கள் அடிக்கடி வந்து அவரைப் பார்த்துப் போவதற்கு வசதியாக இருக்கும்.

டாக்டர்: ஆனால் இதில் பணச் செலவு அதிகமாகுமே.

ம—: பக்தர்கள் அதைப் பொருட்படுத்த மாட்டார்கள். அவர்கள் குருதேவருக்குப் பல விதத்திலும் நன்கு தொண்டு செய்ய முயலுகிறார்கள். பணச் செலவு கல்கத்தாவிலும் உண்டு, தட்சிணேசுவரத்திலும் உண்டு. அவர் தட்சிணேசுவரம் சென்றால் பக்தர்களுக்கு எப்போதும் அவரைப் போய்ப் பார்க்க இயலாமற் போய்விடும்.

டாக்டர் சர்க்காரும் ம—வும் சியாம்புகூரி விருந்த ஓர் இரண்டு மாடி கட்டிடத்திற்குள் நுழைந்தனர். அந்த வீட்டின் முன்புறத் தாழ்வாரத்தில் கிழக்கு மேற்காக ஓர் அறையும், தெற்கு வடக்காக மற்ரெரு பெரிய அறையுமாக இரண்டு அறைகள் இருந்தன. டாக்டர் சர்க்காரும் ம-வும் முதல் அறைக்குச் சென்ருர்கள். அங்கு அவர்கள், குருதேவர் பக்தர்களுடன் அமர்ந்திருந்ததைக் கண்டனர். டாக்டர் பாதுரியும் அங்கு இருந்தார்.

டாக்டர் சர்க்கார் குருதேவரின் நாடியைப் பரிசோதித்துப் பார்த்தார்; அவரது நிலைமையைப் பற்றி விசாரித்தார். பிறகு உரையாடல் கடவுளைப் பற்றித் திரும்பியது.

டாக்டர் பாதுரி: உண்மையைச் சொல்வதானுல் இதெல்லாம் கனவைப் போல மித்யையே ஆகும்.

டாக்டர் சர்க்கார்: எல்லாமே மயக்கமா (பிரமையா)? அப்படியானுல் அந்த மயக்கம் யாருடைய மயக்கம்? ஏன் மயக்கம்? அது மயக்கம் என்று தெரிந்தபிறகும் ஏன் எல்லோரும் பேசிக் கொண்டிருக்கிருர்கள்? கடவுளை மெய் என்றும், அவரது படைப்பைப் பொய் என்றும் என்னுல் நம்ப முடியாது!

குருதேவர்: 'நீ ஆண்டான் நான் அடிமை'—இது ஒரு நல்ல பாவனை. ஒரு மனிதன் தன் உடலை உண்மை என்று உணரும் வரையும், 'நான், நீ' என்ற மனப்பான்மை இருக்கும் வரையும், கடவுளிடம் ஆண்டான்-அடிமை என்ற உறவைக் கொள்வது நல்லது. அத்தகையவன் 'நான் அவனே' என்னும் கருத்தைப் போற்றுவது நல்லதன்று.

மேலும் உங்களுக்குச் சொல்கிறேன். ஓர் அறையை ஒரு பக்கமாக நின்று பார்த்தாலும் சரி, அந்த அறையின் நடுவில் நின்று பார்த்தாலும் சரி, ஒரே அறையைத்தான் நீங்கள் பார்க்கிறீர்கள்.

டாக்டர் பாதுரி (டாக்டர் சர்க்காரிடம்): நான் சற்று முன்பு தெரிவித்த கருத்து வேதாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நீங்கள் சாஸ்திரங்களைக் கொஞ்சம் படியுங்கள். அப்போது நீங்களே தெரிந்துக்கொள்வீர்கள்.

டாக்டர் சர்க்கார்: நான் ஏன் சாஸ்திரங்களைப் படிக்க வேண்டும்? இவர் (ஸ்ரீராமகிருஷ்ணரைக் குறித்து) என்ன சாஸ்திரங்களைப் படித்தா பண்டிதர் ஆனுர்? சாஸ்திரங்களின் கருத்தைத்தானே இவர் சொல்கிருர்? சாஸ்திரங்களைப் படிக்காவிட்டால் என்ன குறை ஏற்பட்டு விடும்?

குருதேவர்: என்ன சொல்கிறீகள்? நான் எவ்வளவோ சாஸ்திரங்களைச் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

டாக்டர் சர்க்கார்: வெறும் கேள்விஞானமாக மட்டுமே இருந்தால் எவ்வளவோ தவறுகள் ஏற்பட்டு விடக்கூடும். உங்களுடைய ஞானம் வெறும் கேள்விஞானம் மட்டுமன்று. ☆

மேகம் பொழியும் ஒரே விதமான மழைத் தண்ணீர் எல்லாப் பச்சிலைகளுக்குள்ளும் சென்று, தனித்தனியான ரஸம், மணம், வீரியம், பயன் இவற்றை எவ்விதம் ஏற்படுத்துகிறதோ, அவ்விதமே அந்தர்யாமியான ஆத்மா ஒருவனுகவே இருந்துகொண்டு மேகம், தீ, பூமி முதலிய வடிவங்களை அடைந்தவனுக, மழை பொழிதல், சமையல் எரித்தல், உலகம் முழுவதையும் சுமத்தல் முதலிய விசித்திரமான பல காரியங்களைச் செய்கிருன். (ஆ மா எல்லா பொருள்களிலும் இருக்கிறது என்பது கருத்தும்.)

—லகுசதச்லோகி



உண்மையான பொருளை ஆச்ரயித்திருப்பதனுல் பொய்யான பொருள் பிரகாசிக்கிறது. சிப்பியில் தோன்றும் பொய்யான வெள்ளியும், பழுதையில் தோன்றும் பொய்யான பாம்பும், உண்மையான சிப்பி, பழுதை இவற்றை ஆச் யித்திருப்பதனுலேயே சத்தியம் போலப் பிரகாசிக்கின்றன என்பதைக் காண்கிருேம். அவ்விதம் பொய்யான இந்தப் பிரபஞ்சமும் சத்தியமான பிரம்மத்தை ஆச்ரயித்திருப்பதனுல் தான் விவகார காலத்தில் சத்தியம் என்று நம்மால் அறியப்படுகிறது.

—லகுசதச்லோகி



அர்த்தநாரீச்வரர்

சச்சிதானந்த பிரம்மம் இப்படிப்பட்டது என்று ஒருவராலும் அறிய முடியாதது. அதனுல்தான் இறைவன் பாதி ஆணுகவும் பாதி பெண்ணுகவும் அர்த்தநாரீச வடிவம் எடுத்தான். பிரகிருதியும் புருஷனும் தானே என்பதைக் காட்டவே அவ்வித வடிவம் தாங்கினுன். அதே சச்சிதானந்தக் கடவுள் இன்னும் சிறிது கீழ்நிலைக்கு வந்து பல புருஷர் களாகவும், பல பிரகிருதிகளாகவும் விளங்குகிருன்.

—பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

எங்கும் நிறைந்துள்ள இறைவன் தனக்கென்று ஓர் உருவமும் பெயரும் இல்லாதவர். ஆண், பெண், அலி, அது என்று குறிப்பிட இயலாத பரம்பொருள், பக்தர்களுக்காகவே பல தெய்வ உருவங்களையும் பெயர்களையும் தாங்கி அருள்பாலிக்கிருர்.

சிவபெருமான் ஆன்மாக்களின் உய்வின் பொருட்டு ஏற்றருளிய திருவுருவங்கள் இருபத்து நான்கு என்று சைவ சமய நூல்கள் கூறுகின்றன. இந்தத் திருவுருவங்களுள் மிகவும் பழமையானது அர்த்தநாரீசுவரர் என்னும் திருவுருவமாகும். அது வலப்பக்கத்தில் ஆண் பாதியும், இடப்பக்கத்தில் பெண் பாதியுமாக அமைந்துள்ளது. அம்மையப்பர், உமையொருபாகன், மாதொருபாகன், மாதொரு பங்கன், மாதியலும் பாதியர், அம்பிகைபாகன் என்றெல்லாம் சமயப் பெரியோர்கள் இந்தத் திருவுருவத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார்கள்.

இறைவன் பாதி ஆண்வடிவமாகவும் பாதி பெண் வடிவமாகவும் விளங்குதல், அவனே பிரபஞ்ச மனைத்தின் உற்பத்திக்கு மூலகாரணம் என்பதையும், இறைவனே உயிர்கள் அனைத்திற்கும் தாயாகவும் தந்தையாகவும் விளங்குகிருன் என்ற உன்னதத் தத்துவத்தையும் விளங்குகிறது. இவ்விதம் ஓர் உருவத்திலேயே கடவுளைத் தாயாகவும் தந்தை யாகவும் வழிபடும் முறை இந்துமதத்தில் மட்டுமே இடம் பெற்றிருக்கிறது. இந்து மதத்திற்கே உரிய இந்தச் சிறப்பு பிற மதங்களிலோ மதப்பிரிவு களிலோ கிடையாது.

உலக வரலாற்றில் மிகவும் பழமையானது என்று கருதப்படுவது ரிக்வேதம். அதில் பரம்பொருளைத் தாயாகவும் தந்தையாகவும் வழிபடும் கருத்துக் களைக் கொண்ட மந்திரங்கள் காணப்படுகின்றன. இந்துமதத் தத்துவம் கண்ட அர்த்தநாரீச்வரர் வடிவம் மிகவும் தொன்மையானது. இந்தக் கருத்தை வலியுறுத்தும் வகையில் மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தில் பின்வருமாறு கூறுகிருர் :

தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும்உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ!

தாயாகித் தந்தையுமாகி உயிர்களைத் தாங்குகின்ற தெய்வம் சிவபெருமான். அருளாளனுகத் திகழும் அந்தப் பெருமானை 'அம்மையே அப்பா' என்று வாய் மணக்க வழுத்துகிருர் திருநாவுக்கரசர். 'அருளது சக்தியாகும் அரன்றனக்கு' என்பது சாஸ்திரம். 'அம்மையப்பரே உலகுக்கு அம்மை யப்பர் என்று அறிக!', 'அம்மையப்பர் அப் பரிசே வந்து அளிப்பர்' என்று திருக்களிற்றுப்படியார் உணர்த்துகிறது.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனப்படும் சிவபெருமானின் ஐந்து தொழில்களில் நான்காவதாக இடம் பெறும் மறைத்தல் என்பது ஜீவன்களை உய்விக்கத்

தேவைப்படுகிறது. இதுவே திரோதானம் என்ற பெயர் பெறுகிறது. இந்தத் திரோதானச் சக்தியிலிருந்து இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி தோன்றுகின்றன. சைவ சித்தாந்தக் கருத்துப்படி ஜீவர்கள், ஆணவம் கன்மம் மாயை என்ற மும் மலங்களுடன் இருக்கிருர்கள். ஜீவர்களின் மும் மலங்களையும் நீக்கி, அவற்றின் 'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி' ஆட்கொள்ள வேண்டும் என்பதே சிவத்தின் செயலாகும். இவ்விதம் சித்தமலம் அறுவிக்க நினைக்கும் சிவனுரின் இச்சை அதாவது அவாவே இச்சா சக்தி எனப் படுகிறது. சித்தமலத்தை எப்படி நீக்குவது என்று ஞானத்தால் அறியும் ஆற்றல் ஞானசக்தி. அந்த ஆற்றலையும் தன் விருப்பத்தையும் செயற்படுத்தும் போது அதற்குக் கிரியா சக்தி உதவுகிறது. இந்த மூன்று சக்திகளையும் உமாமகேசுவரனின் ஒரு பாகமாக விளங்கும் உமையாளாகப் பாவித்துச் சைவர்கள் வழிபடுகிருர்கள். இவ்விதம் சக்தியோடு கூடிய சிவனுரை வழிபடுபவர்கள் உலகில் எல்லா நலன்களுடன் வாழ்வாங்கு வாழலாம் என்பதை 'பெண்ணின் நல்லாளொடு பெருந்தகை இருந்ததே!' என்ற பாடலில் ஞானசம்பந்தர் கூறுகிருர்.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிவத்துக்கும் சக்திக்கும் இடையேயுள்ள தொடர்பு குறித்துப் பின் வருமாறு கூறுகிருர் :

"பரசிவத்திற்கும் பராசக்திக்கும் உள்ள வேறுபாடு வெறும் சொல்லளவிலேதான் இருக்கிறதே தவிர, உண்மையில் கிடையாது. நெருப்பும் அதன் உஷ்ணமும், பாலும் அதன் வெண்மையும், மணியும் அதன் ஒளியும் ஒன்ருனவை போல, சிவமும் சக்தியும் ஒன்ருனவையாகும். ஒன்றை நினைக்காமல் மற்ருென்றை நினைக்கவும் இயலாது; அவற்றை வேறுபடுத்தவும் இயலாது.

"சிவம் சக்தி ஆகிய இரண்டும் சிருஷ்டிக்குப் பெரிதும் அவசியமானவை. உலர்ந்துபோன களி மண்ணை வைத்துக்கொண்டு எந்தக் குயவனும் சட்டி பண்ண முடியாது. தண்ணீர் அதற்கு அவசியம் வேண்டும். அது போல, சக்தியின் உதவி இல்லாமல் சிவனுல் மட்டுமே சிருஷ்டித் தொழில் நடைபெருது."

சச்சிதானந்தப் பரம்பொருளாகிய சிவபெருமான் உயிர்கள் கடைத்தேற அருள்புரிகிருர். அவ்விதம் அருள்புரியும் அவரது ஒப்பற்ற தன்மையே சக்தியாகும். அந்தப் பாராசக்திக்கு வேருக இல்லாதவன் இறைவன் என்பதைச் சைவ நூலாகிய திருவருட் பயன் பின்வரும் குறளின் மூலம் உணர்த்துகிறது :-

> தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும்
> சக்தி பின்னமிலான் எங்கள்பிரான்.

கற்பனைக்கு எட்டாத பரம்பொருள் ஜீவர்களின் நன்மையின் பொருட்டுக் கருணையே உருவாகிறது. சிவபெருமானின் அளவற்ற கருணையே அருள் பொங்கும் அம்பிகையாக வடிவெடுக்கிறது. பவ தாரணி என்பது தேவியின் திருநாமங்களில் ஒன்று. அதற்கு ஜீவர்களைப் பிறவிக்கடலிலிருந்து கடத்திக் காப்பவள் என்பது பொருளாகும். ஜீவர்களைச் சிவத்துடன் சேர்க்கும் சிவனுரின் அருட்சக்தியே பராசக்தியாவாள்.

> உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில் வந்திங்கு,
> எமையும் தமக்கன்பு செய்யவைத்தார் இனி
> எண்ணுதற்குச்
> சமையம் களும்இல்லை ஈன்றெடுப்பாள் ஒருதாயும் இல்லை
> அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே
> —அபிராமி அந்தாதி

தமிழ் நாட்டில்

நான்முகன் தமது சக்தியை நாவிலும், திருமால் தமது சக்தியை மார்பிலும் வைத்திருக்கிருர்கள். அப்படி இருக்கும்போது சிவபெருமான் மட்டும் பார்வதி தேவிக்குத் தமது உடலில் பாதியையே கொடுத்திருக்கிருர் என்ருல் அதற்குக் காரணம் என்ன?

தமிழ்நாட்டில் அர்த்தநாரிச்வரருக்குத் தனிக் கோவில் இருக்கிறது. 'திருச்செங்கோட்டுத் தல வரலாற்றுச் சுருக்கம்' என்ற நூலில் ஈ. ஏ. சீரங்க முதலியார் அவர்கள் 'பார்வதியார் இடப்பாகம் பெற்றது' என்னும் தலைப்பில் பின்வருமாறு கூறுகிருர்:—

"ஒரு சமயம் கைலாயத்தில் விளையாட்டாகப் பார்வதிதேவியார் சிவபெருமானின் கண்களை மூடினுர். உலகமே இருண்டது. ஆக்கல், அளித்தல், அழித்தல் முதலிய தொழில்கள் நடைபெருமல் போயின. தேவர்களும் முனிவர்களும் உலகத்து உயிர்வகைகளும் அல்லலுற்றனர். தேவியார் மூடிய கைகளை எடுக்கவே, முன்போலவே எல்லாம் நடைபெறலாயின. தன் செய்கைக்கு வருந்தி நின்ற அம்மையை விளித்துக் கண் மூடிய குற்றத்திற்காகப் பூமியில் தவம் புரியுமாறு பணித்தார் பரமன். அந்தக் கட்டளைக்கு இணங்கித் தேவியார் முதலில் காஞ்சியிலும் பின்னர்த் திருவண்ணுமலையிலும் தவமியற்றினுர்."

[281-ஆம் பக்கம் பார்க்க]



தேவி வழிபாடும் அதன் தத்துவமும்

பிரம்மசாரி முத்துக்குமார்

தேவி வழிபாடு

பரம்பொருளைத் தாயாக வழிபடும் சக்தி வழிபாட்டு முறை இந்தியாவில் பல ஆயிரம் ஆண்டுகளாக வழக்கத்தில் இருந்து வருகிறது. உலகின் பிற பாகங்களிலும் அன்னை வழிபாடு ஒரு காலத்தில் இருந்திருக்கிறது என்பதற்குப் பல சான்றுகளை வரலாற்றில் காணலாம். மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச்சியின்போது கண்டெடுத்த பல பொருள்களில் அன்னைத் தெய்வத்தின் மண்சிலைகளும் இருந்திருக்கின்றன. சிந்து சமவெளிப் பகுதியில் கிடைத்த அன்னைத் தெய்வத்தின் சிலைகளைப் போலவே பாரசீகம், மொசபடோமியா, பாலஸ்தீனம், சைப்ரஸ், கிரேக்கம், எகிப்து, துருக்கி முதலிய இடங்களிலும் கிடைத்திருப்பதாகத் தொல்பொருள் ஆராய்ச்சித்துறையைச் சேர்ந்த சர் ஜான் மார்ஷல் என்ற அறிஞர் கூறுகிறார்.

சிந்து சமவெளி நாகரிகம் ஏறக்குறையக் கி. மு. நாலாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அம்பிகை வழிபாடு எவ்வளவு பழமையானது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

ரிக்வேதத்தில் பராசக்தியைக் குறிப்பிடும் ‘தேவி ஸூக்தம்’ என்னும் பகுதி அமைந்திருக்கிறது. உஷஸ், ராத்திரி, அதிதி, வாக், புரந்தி, திஷணை, இடா, வாருணி என்று அன்னைத் தெய்வத்தின் பல பெயர்கள் ரிக்வேதத்தில் வருகின்றன. வேதம் சக்தியை ‘வாக்’ என்று கூறுகிறது. கேனோபநிஷதம் அன்னையைப் பொன்னிறமானவள் என்று குறிப்பிடுகிறது. பேரானந்தத்தை அருளும் பரசிவத்தின் அருள்சக்திதான் பராசக்தியாகும் என்று சைவசித்தாந்தம் கூறுகிறது.

தந்திர சாஸ்திரங்கள் அம்பிகையைப் பத்து வடிவங்களில் ‘தச மகாவித்யா’ என்று அழைக்கின்றன. அவை முறையே திரிபுரசுந்தரி, மாதங்கி, பகளாமுகி, கமலாத்மிகா, காளி, திரிபுரபைரவி, தாரா, தூமாவதி, சின்னமஸ்தா, புவனேசுவரி என்பனவாகும்.

தேவி உபாசகர்கள் அம்பிகையை ஆறு விதங்களில் கூறுகிறார்கள். அவை பராசக்தி, ஞானசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, குண்டலினிசக்தி, மாத்ருகா சக்தி என்பனவாகும். பிரபஞ்ச இயக்கங்கள் எல்லாவற்றிற்கும் ஆதாரசக்தியாக இருந்து இயக்குபவர்கள் இவர்களே ஆவர். “அவளிடமிருந்தே பிரம்மா தோன்றினார், விஷ்ணு தோன்றினார், ருத்திரன் தோன்றினார், எல்லாத் தேவ கணங்களும் தோன்றினர்; கந்தர்வர், அப்ஸரஸுகள், கின்னரர் ஆகியோர் அனைவரும் அவளிடமிருந்தே தோன்றினர்; போகப் பொருள்கள் தோன்றின; சக்தி படைத்த அனைத்தும் உண்டாயின; முட்டை வேர்வை விதை கரு இவற்றிலிருந்து பறவைகள், மற்றும் எவ்வகைப் பிராணிகளும் ஸ்தாவர ஜங்கமங்களும் உண்டோ அவையும் மனிதர்களும் உண்டானார்கள்” என்று தேவி உபநிஷதம் கூறுகிறது.

அன்னை வழிபாடு மனித இயல்போடு இரண்டறக் கலந்த ஒன்றாகும். ஆகவேதான் பூமி, கடல், ஆறு, நாடு முதலியவற்றை எல்லாம்கூட அன்னைத் தெய்வத்தின் அம்சமாக நாம் மதிக்கிறோம். அம்பிகையின் ஆதிக்கம் இல்லாத இடமே இந்தப் பிரபஞ்சத்தில் இல்லை.

பல மதப் பிரிவுகள் இருந்தாலும் இமயம் முதல் குமரி வரையிலும் உள்ள மக்களிடையே சக்தி வழிபாடு இடம் பெற்றிருக்கிறது. காஷ்மீரில் க்ஷீர் பவானியாகவும், மகாராஷ்டிரத்தில் துளஜா பவானி

யாகவும், குஜராத்தில் அம்பாஜியாகவும், உத்தரப் பிரதேசத்தில் விந்தியவாசினியாகவும், வங்காளத்தில் காளியாகவும், இமயத்தில் உமையாகவும், அஸ்ஸாமில் காமரூபிணியாகவும், மைசூரில் சாமுண்டியாகவும், காசியில் விசாலாட்சியாகவும் அன்னபூரணியாகவும், கேரளத்தில் பகவதியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும் இந்தியாவின் தென்கோடியில் கன்னியாகுமரியாகவும் அன்னை பராசக்தி ஆராதிக்கப் பெறுகிறாள். நமது நாட்டில் அமைந்துள்ள ஐம்பத்தொரு சக்திபீடங்களும் அம்பிகை வழிபாட்டின் சிறப்பிற்கும் முக்கியத்துவத்திற்கும் எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.

சக்தி வழிபாட்டைக் குறித்து, சுவாமி விவேகானந்தர், 'கீழை நாடும் மேலை நாடும்' என்ற தமது கட்டுரையில், "இந்தச் சக்தி வழிபாடு வெளிப்படையாகவே எங்கும் இருந்து வருகிறது. ரோமன் கத்தோலிக்க மதம் மட்டுமே ஐரோப்பாவில் உள்ளது. அந்த மதத்தில் ஜெஹோவாவோ அல்லது ஏசுவோ, அல்லது திரிமூர்த்தியோ இரண்டாவது ஸ்தானம் பெற்றிருக்கின்றனர். அங்கே தாய்க்குத்தான் வழிபாடு - குழந்தை ஏசுவைக் கையில் ஏந்திய தாய்தான் பூஜிக்கப்படுகிறாள். சக்கரவர்த்தி, தளபதி கொடியேந்திய சிப்பாய், சுக்கான் பிடித்த மாலுமி, கந்தை உடுத்திய மீனவன், தெருவில் திரியும் பிச்சைக்காரன் ஆகிய எல்லோருமே 'தாய்' என்றுதான் கூக்குரலிடுகிறார்கள். அரண்மனையிலிருந்தும் குடிசையிலிருந்தும் திருச்சபையிலிருந்தும், லட்சக்கணக்கான குரல்கள் லட்சம் விதங்களில் லட்சம் இடங்களிலிருந்து 'தாயே!' என்றுதான் கூறுகின்றன. எங்கும் எல்லா இடங்களிலிருந்தும் இரவு பகலாக 'ஆவே மேரியா! ஆவே மேரியா!' என்ற ஒலிதான் கேட்கிறது" என்கிறார்:

மேலும் அவர் தமது 'அருளுரை (Inspired Talks)' யில் பின்வருமாறு கூறுகிறார் :

"அன்னையாகவே சக்தி முதல்முதலில் வெளிப்படுகிறது. தந்தை என்ற கருத்தைவிட மிகவும் உயர்ந்த கருத்து அது. அன்னை என்ற பெயருடன் எல்லா ஆற்றல்களும் பொருந்திய அம்பிகையின் கருத்துத் தோன்றுகிறது. தேவியே நம்முள் உறங்கிக்கொண்டிருக்கும் குண்டலினி சக்தியாவாள். அவளை வழிபடாமல் நம்மை நாம் ஒரு போதும் அறிந்துகொள்ள மாட்டோம். அவள் உலகத்தில் உறைகிறாள்; என்றாலும் அவள் அதிலிருந்து வேறானவளாக இருக்கிறாள். அவளே கால தேச நிமித்தமாவாள்.

"இறைவனே ஜகன்மாதாவாக விளங்குகிறார். அவளிடம் வரையறைக்குட்பட்டதாகவும் வரையறையைக் கடந்ததாகவும் இரண்டுவித இயற்கைகள் இருக்கின்றன. முதல் நிலையில், அவளே கடவுள், பிரகிருதி, ஆன்மா என்னும் மூன்று நிலைகளில் இருக்கிறாள். இரண்டாவது நிலையில், அவள் அறியப்படாதவளும் அறிந்துகொள்ள முடியாதவளும் ஆவாள்.

"ஜகன்மாதாவின் ஓர் அம்சமே கண்ணபிரான்; மற்றோர் அம்சம் புத்தர்; இன்னுமோர் அம்சம் இயேசு கிறிஸ்து. நம்மைப் பெற்ற உலகத் தாயிடம் உள்ள தேவியின் ஒரு பொறியையேனும் வணங்குவதால் நாம் மேன்மை அடைவோம். நீ அன்பும் ஞானமும் வேண்டுவாயானால் அன்னை பராசக்தியை வணங்கு."

அன்னையின் அருள் வடிவங்கள்

சுத்தசிவத்திடம் முதல்முதலாக உதிக்கும் 'அஹம்' என்ற உணர்வுதான் அன்னையின் உண்மையான வடிவமாகும். அந்த வடிவத்திற்கு 'ஆதிசக்தி' என்று பெயர். ஆதிசக்தியின் ஆவிர்ப்பாவத்தினால் கற்கண்டு மலைபோல் இருந்த சுத்த சிவம் ஸ்வரூப ஆனந்தம் உதிக்கப்பெற்று அருள் மலையாக விளங்குகிறது. ஆகவே தந்திர சாஸ்திரங்கள் ஜகன்மாதாவை 'வியாக்கியான ரூபிணி', 'விமர்சன ரூபிணி' என்று புகழ்கின்றன.

"பிரம்மா முதலிய தேவர்களாலும் அறிந்துகொள்ள இயலாதவள் அஜ்ஞேயா. அந்தம் அல்லது முடிவே இல்லாதவள் அனந்தா. எவராலும் கிரகிக்க முடியாதவள் அலக்ஷ்யா. ஆரம்பம் என்று ஒன்று இல்லாதவள் அஜா. எங்கும் ஒருத்தியாகவே இருப்பவள் ஏகா. ஒருத்தியே பல ரூபங்களில் இருப்பவள் நைகா" என்று தேவி உபநிஷதம் கூறுகிறது.

"ஆதிசக்தி தன்னிடமிருந்து முக்குணங்களால் மகாகாளி, மகாலட்சுமி, மகாசரஸ்வதி ஆகிய மூன்று வடிவங்களைத் தோற்றுவித்தாள். பிறகு இந்த மூன்று சக்திகளுள் ஒவ்வொன்றிலிருந்தும் மும்மூர்த்திகளும் மற்றச் சக்திகளும் தோன்றின" என்று தேவி மகாத்மியம் கூறுகிறது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களையும் முறையே பிரம்மா விஷ்ணு ருத்திரன் ஈசானன் சதாசிவன் ஆகியோரின் மூலம்

தேவி நடத்துவதனுல் அவள் 'பஞ்சக்ருத்யபராயணு' எனப்படுகிருள். ஆதிசக்தி தான் இயற்றும் தொழிலுக்கு ஏற்பப் பலவேறு அம்சங்களாகத் தன்ன வெளிப்படுத்தியுள்ளாள்.

எங்கும் பரந்து நிறைந்துள்ள அவளது நிலையைப் பூரணி, பராசக்தி, ராஜராஜேச்வரி, மூலப்பிரகிருதி ஆகிய திருநாமங்கள் உணர்த்துகின்றன. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலைச் செய்யும்போது முறையே அவள் பிரம்மாணி வைஷ்ணவி ருத்ராணி என்று பெயர் பெறுகிருள். அவளே சகுணப் பிரம்மமாகத் தோன்றும்போது துர்க்கை என்று போற்றப் பெறுகிருள். காலமே உருவெடுத்தவள் என்ற நிலையில் அவள் காளியாகிருள். ஆய கலைகள் அனைத்தும் உருவானவள் சரஸ்வதிதேவி. எல்லாச் செல்வ சம்பத்துக்களுக்கும் அதிதேவதையாக விளங்கும்போது மகாலட்சுமியாகத் திகழ்கிருள். உலகத்தைக் காத்து ஆதரிக்கும் அன்னையான அவளே ஜகத்தாத்ரீயாகவும் பவதாரணியாகவும் போற்றி வணங்கப் பெறுகிருள். உலகனைத்துக்கும் தாயாக விளங்கும் அவள் என்றும் கன்னியாகவே விளங்குகிருள். 'அகிலாண்ட கோடியீன்ற அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசுமானந்த ரூபமயிலே' என்பது தாயுமானவரின் வாக்கு.

அடுத்த இதழில் துர்க்கை, காளி, சரஸ்வதி, மகாலட்சுமி ஆகிய தேவியின் அருள் வடிவங்களைக் குறித்தத் தத்துவ உண்மைகளைத் தெரிந்து கொள்ளுவோம்.

[அடுத்த இதழில் முடியும்]

(278-ஆம் பக்கத் தொடர்ச்சி)

''அடுத்துத் திருச்செங்கோட்டிலும் தவமியற்றினுர். அவர் நீராடுவதற்கெனப் பல தீர்த்தங்களைத் தம் துதிக்கையை நீட்டி எடுத்து வந்து சேர்த்தார் மூத்த பிள்ளையாகிய கணபதியார். அம்மையும் அந்தத் தீர்த்தங்களில் நீராடித் தவமியற்றினுர். தவத்தின் முடிவில் கேதார ஈச்வர விரதமும் பூசையும் மேற்கொண்டார். அலைமகளும் கலைமகளும் மற்ற தேவ மாதர்களும் மலைமகள் புரியும் நோன்பைக் காண வந்தனர். ஒரு புரட்டாசி மாதத்து வளர்பிறை எட்டாம் நாள் தொடங்கி விதிப்படி பார்வதியார் நோன்பிருந்தார். அந்த விரதத்தை மெச்சிய விமலன் மற்ெறாரு புரட்டாசித் தேய்பிறை நான்காம் நாள் காட்சி கொடுத்தார். உலகமாதாவாகிய உமை அவரை விட்டு நீங்காமல் என்றும் அவரது உடலின் ஒரு பாகமாக இடத்தில் இருக்க வரம் வேண்டினுர். வேண்டுவோர் வேண்டுவதை அளிக்கும் வள்ளலாகிய அவரும் இசைந்து, அம்மையார் தம் இடது கூருக இருக்க அருள் புரிந்தார். அனைவருக்கும் அத்தன்மையாகக் காட்சியருளி அம்மையப்பர் ஆனுர். பார்வதியாரும் பாகம் பிரியாளாயினுர்.''

'நின்ற அந்தணன்', 'நின்ற வேதியன்', 'நின்ற தலைமகன்', 'நீர்ஊறு செஞ்சடையன்' என்றெல்லாம் சிவபெருமானைக் குறித்துத் தேவாரப் பதிகங்கள் பாடியவர் திருஞானசம்பந்தர். அவர் ஒரு சமயம் பக்தர்கள் சூழ ஸ்தல யாத்திரை மேற்கொண்டபோது திருச்செங்கோட்டுக்குச் சென்று அங்கு ஆலயத்தில் எழுந்தருளியுள்ள அர்த்தநாரீசுவரரை வழிபட்டார். அப்போது அவர் அருளிய பதிகங்களில் சில அடிகள் வருமாறு:

'வெந்த வெண் நீறணிந்து விரிநூல் திகழ்மார்பின் நல்ல
பந்தன வும் விரலாள் ஒருபாகம் அமர்ந்தருளிக்
கொந்தண வும் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்
அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பாரே.' [நின்ற
'அலிமலி தண்புனலோ டரவஞ் சடைக்கணிந் தாகம்
மலைமகள் கூறுடையான்.'
'பாலன நீறுபுனை திகழ்மார்பில் பல்வளைக்கை நல்ல
ஏல மலர்க்குழலாள் ஒருபாகம் அமர்ந்தருளி.'
'நல்ல மடவாள் திகழ்மார்பில் நண்ணும்'
'பணைத்தோளியோர் பாகமாக'

பிறிதொரு சமயம் ஞானசம்பந்தருடன் வந்திருந்த பக்தர்கள் குளிர்சுரத்தால் வருந்தினர். அப்போது அவர்களின் நோய் தீர ஞானசம்பந்தர் அர்த்தநாரீசுவரரைக் குறித்த திருநீலகண்டப் பதிகங்கள் பாடி அடியார்களின் நோயை நீக்கினுர் என்பது வரலாறு.

பண்டைய தமிழ் ஏட்டுப்பிரதியில் 'மங்கைபங்கன் திருப்பள்ளியெழுச்சி' என்று பதினெரு பாடல்கள் உள்ளன. ஸ்ரீ ஆதிசங்கரரும் அர்த்தநாரீசுவர ஸ்தோத்திரம் அருளியுள்ளார். இவை தவிர, மகாகவி கல்ஹணர் என்பவரும் உபமன்யு என்பவரும் சம்ஸ்கிருத மொழியில் முறையே அர்த்தநாரீசுவர ஸ்தோத்திரம், அர்த்தநாரீசுவராஷ்டகம் ஆகியவற்றை இயற்றியுள்ளனர். ★

பரமார்த்தப் பிரசங்கம்

சுவாமி விரஜானந்தர்

பக்தியோகியின் துறவுதான் எல்லாவற்றிலும் மிகவும் சுலபமானது;* துறவு மனப்பான்மை அவனுக்கு இயல்பாகவே வருகிறது. பக்தியோகத்தின் மூலம் துறவைப் பெறுவதில் கடுமையான போராட்டமோ, உடலை வருத்திக்கொள்வதோ இல்லை. வலுக்கட்டாயமாக மனதை அடக்கும் வீண் முயற்சியும் அதில் இல்லை.

மனதில் தோன்றும் எண்ணங்களுக்கு (விருத்திகளுக்கு)ப் புதிய திருப்பத்தைத் தர வேண்டும்; புதிய வழியில் பாயும்படி அவற்றைத் திருப்பிவிட வேண்டும்—இந்தக் காரியத்தை மட்டுமே பக்தியோகி செய்ய வேண்டும்.

உலகிலுள்ள பல பொருள்களின் மீது மனிதன் பற்றுக் கொண்டிருக்கிறான். அது காரணமாக எல்லையற்ற துன்பம், சோகம், வாழ்க்கையில் நம்பிக்கையின்மை ஆகியவற்றைத் தொடர்ந்து மீண்டும் மீண்டும் அனுபவிக்கிறான். இவ்விதம் அனுபவித்து அனுபவித்து, நாளடைவில் அவன், தான் பற்றுக் கொண்டுள்ள பொருள்களின் சாரமற்ற தன்மையை (அவை பொருளற்றவை என்பதை) நன்கு உணர்ந்துகொள்கிறான். பிறகு ஆசைகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு ஆசையற்றவனாக ஆகிறான். அப்போது பொருள்களின் மீதுள்ள பற்றுதல்கள் தாமாகவே அவனை விட்டு நழுவுகின்றன.

அந்த நிலையைப் பெற்றதும் அவனது மனமும் அந்தராத்மாவும், என்றென்றும் உள்ள உண்மையாகவும் பரம சுகத்தின் உறைவிடமாகவும் விளங்கும் பரமேசுவரனை அடைய ஆவல் கொள்கின்றன; அவனுடைய இதயத்தில் பிரேமையும் பக்தியும் நிறைகின்றன.

---

* ஞானம், கர்மம், யோகம் ஆகியவற்றைப் பின்பற்றுபவர்கள் மிகுந்த சிரமத்தின் பேரில் துறவு மனப்பான்மையைப் பெறுகிறார்கள். நான்கு யோகங்களில் பக்தியோகத்தின் மூலம் துறவு மனப்பான்மை பெறுவது எளிது.

ஆகவேதான் பாவங்களும் சீர்கேடுகளும் நிறைந்த இரும்பு யுகமாகிய இந்தக் கலியுகத்திற்குப் பக்தி மார்க்கமே மிகவும் ஏற்றது என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் அறிவித்திருக்கிறார்.

* * *

கர்மம், யோகம், ஞானம், பக்தி எனப்படும் நான்கு யோகங்களும் எவர் ஒருவருடைய வாழ்க்கையில் பரிபூரண சமரசத்துடன் காணப்படுகின்றனவோ அவரே இலட்சிய மகாபுருஷரும், மகான்களுள் சிறந்தவரும் ஜகத்குருவும் ஆவார்.

நான்கு யோகங்களும் இணைந்த வாழ்க்கை முறையை ஸ்ரீராமகிருஷ்ணர் தாமே தமது வாழ்க்கையில் பழகி, அந்த வாழ்க்கை முறையை உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தக்கூடிய இலட்சியமாக அவர் அளித்துச் சென்றிருக்கிறார். இதுவே தற்கால மக்களுக்கு ஏற்ற யுகதர்மமாகும்.

* * *

துறவு இல்லாமல் நான்கு யோகங்களுக்குள் எந்த ஒரு யோகத்தையுமே அனுஷ்டிப்பது சாத்தியமில்லை. அது போலவேதான், துறவு இல்லாமல் உண்மையான உலக இன்பத்தையும் அனுபவிப்பது சாத்தியமில்லை. துறவு இல்லாத உலக இன்பம் துன்பமே ஆகும். அத்தகைய இன்பத்தைத் தொடர்ந்து அதன் விளைவாகத் துன்பமே வருகிறது.

துறவு என்ற சொல்லைக் கேட்டதுமே மக்கள் பயந்தோடிவிடுகிறார்கள். அதற்குக் காரணம், துறந்துவிடுவதில் எவ்வளவு ஆனந்தம் இருக்கிறது என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளாததுதான்.

ஒருவனை அழைத்து, 'நீ துறந்து விட வேண்டும்' என்று சொன்னால், தன் மனைவி மக்கள் அன்புக்கு உரியவர்கள், வீடு வாசல், சொத்து, சுதந்திரம் ஆகியவற்றையெல்லாம் விட்டுத் தான் சன்னியாசியாகிவிட வேண்டும் என்று அவன் ஏன் நினைக்க வேண்டும்? அன்றாட வாழ்க்கையில் தன் சக்திக்கு ஏற்றவகையில் சிறிய சிறிய பொருள்களைத் தியாகம்

செய்வதாகிய துறவை அவன் ஏன் பழகக் கூடாது? அவ்விதம் அவன் பழகினுல் துறந்துவிடுவதில் எவ்வளவு ஆனந்தமும் மகிழ்ச்சியும் இருக்கின்றன, அது எந்த அளவுக்கு மனதை விரிவடையச் செய்கிறது, எந்த அளவுக்கு அது மனதை உற்சாகத்துடன் வைத்திருக்கிறது என்பதை அவன் அறிந்து கொள்வான். எந்தத் துறவு மனதில் மகிழ்ச்சியைத் தோற்றுவிப்பதில்லையோ அந்தத் துறவு துறவே ஆகாது. அதை வேறு ஏதோ ஒன்று என்றுதான் சொல்ல வேண்டும்.

*   *   *

துறவுதான் உண்மையிலேயே நம் வாழ்க்கைக்கு உயிராக இருக்கிறது. சொல்லப்போனுல் ஒவ்வொரு விநாடியும் நாம் நம்மை அறியாமலே துறந்து கொண்டுதான் இருக்கிறேம். நாம் மூச்சுக் காற்றைத் துறந்து வருகிறேம். அதாவது, நாம் உயிர் வாழ்வதற்காக மூச்சுக்காற்றை உள்ளே இழுத்துப் பிறகு அதை வெளியே விடுகிறேம். அது போல உணவு உட்கொள்வதன் மூலமும் வேறு போஷணைகளின் மூலமும் இதயத்தில் இரத்தம் சேருகிறது. அதே சமயத்தில் அந்த இரத்தம், இரத்தக் குழாய்களையும் நரம்புகளையும் வலிமைபடுத்துவதற்காக அவற்றில் பாய்ந்து செல்கிறது. இவ்விதம் நடைபெருவிட்டால் மனிதன் நிச்சயம் இறந்துவிடுவான்.

நாம் மற்றவர்களிடமிருந்து எதைப் பெற்ருலும் சரி; பிருகிருதியாகிய இயற்கையிலிருந்து எதைப் பெற்ருலும் சரி; நாம் நமது உழைப்பின் மூலம் கல்வி, விஞ்ஞானம், பிரபஞ்சத்தைப் பற்றிய உண்மைகள், செல்வம், ஆன்மிகம் ஆகியவற்றைப் பெற்ருலும் சரி; இவை எல்லாம் மற்றவர்களின் நன்மைக்காகவும், மற்றவர்களின் குறைகளை நாம் நீக்குவதற்காகவுமே அமைந்திருக்கின்றன.

நம்மிடம் இருப்பதைத் தங்குதடையில்லாமல் பிறருக்குக் கொடுக்கவும் விநியோகிக்கவும் வேண்டும். அவ்விதம் செய்ய நாம் தயங்கினுல், நம்மிடம் இருப்பவை நாளடைவில் உபயோகப்படுத்தப் படாமல் வீணுகி அழிந்து யாருக்குமே பயன்படாமல் போய்விடும். விநியோகிக்க வேண்டுமே தவிர, பண்டமாற்றம் (உதவிக்கு பிரதியுபகாரம் பெற்றுக் கொள்ளுதல்) செய்வது கூடாது என்பதை மனதில் நன்கு ஆழ்ந்து பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

தானமாக ஒன்றைத் தருவதோ, தியாக உணர்வோடு ஒரு காரியத்தைச் செய்வதோ, பிறரை எந்த வித நிபந்தனைக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்படுத்துவதாக இருக்கக் கூடாது. அந்தச் செயல்களை எந்தவிதச் சுயநல நோக்கமும் இல்லாமல் இயல்பாகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் அந்தச் செயல்கள் அழியாத நன்மையை நமக்குத் தருவனவாக அமையும்.

''கொடு, முழுவதும் கொடுத்து விடு, பிரதிபலனையே எதிர்பார்க்காதே. யார் ஒருவன் பிரதிபலனை எதிர்பார்க்கிருனே அவனுடைய கடல் (சிந்து) வற்றி ஒரு சிறு துளியாகச் (பிந்து) சுருங்கி விடும்'' என்று சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கிருர்.

*   *   *


தியாகம் இந்த வெளியுலகில் எங்கே பார்த்தாலும் தெளிவாகக் காணப்படுகிறது.

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவை ஒளியையும் உஷ்ணத்தையும் தருகின்றன; மரங்கள் பழங்கள், மலர்கள், தேன், நறுமணம், நிழல் ஆகியவற்றைத் தருகின்றன; ஆறுகள் தாகத்தைத் தீர்க்கின்றன; பூமி எல்லா உயிர்களுக்குமாக உணவையும் மற்றும் பல பொருள்களையும் உற்பத்தி செய்தபடியே இருக்கிறது. இவ்விதம் அனைத்துமே மற்றவர்களின் நன்மைக்காகத் தாராளமாகவும் மௌனமாகவும் தத்தம் இயல்புக்கு ஏற்பத் தம்மையே வழங்கிக்கொண்டிருக்கின்றன.

மனிதன் ஒருவன்தான் சாகும்போதுகூட, ''என்னுடையது! என்னுடையது!'' என்று கத்திக் கொண்டே தன்னைப் பரிதாப நிலைக்கு உட்படுத்திக் கேலிப் பொருளாகச் செய்து கொள்கிருன். *

தான் ரகசியமாகச் செய்யும் தீவினைகளை ஒருவரும் அறியமாட்டார்கள் என்று மனிதன் எண்ணிக்கொள்கிருன். ஆனுல் தேவர்களும், உள்ளத்தில் உறையும் இறைவனும் சதா சர்வகாலமும் மனிதனின் செயல்களைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிருர்கள்.

—மகாபாரதம்



அயோத்தி யாத்திரை



பிர்லாமந்திருக்குச் செல்லும் வழியில், "சுவாமிஜி, தாங்கள் தமிழ்நாட்டுக்காரரா?" என்று ஒரு பாபாஜி தமிழில் கேட்டார். அவரிடம் பேசியபோது, அன்று காலையில் அவர் என்னை நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரத்தில் பார்த்ததாகவும், ஆகவே நான் தமிழ் அறிந்தவனாக இருக்க வேண்டுமென்று தாம் ஊகித்ததாகவும் கூறினார். நாகராஜன் என்ற பெயருடைய அவர் சென்னை புரசைவாக்கத்தில் இருந்தவராம். கடந்த இரண்டரை ஆண்டுகளாக ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருக்கிறாராம். தமிழ் பேசி மூன்று மாதங்கள் ஆயின என்றும், மூன்று மாதங்களுக்குப் பிறகு இப்போதுதான் என்னுடன் தமிழில் பேசும் வாய்ப்புக் கிடைத்தது என்றும் அவர் தெரிவித்தார். பெங்களூரில் தாம் படித்த போதும், சென்னையில் தாம் தங்கியிருந்தபோதும் அங்குள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடங்களுக்குச் சென்றதுண்டு என்று அவை பற்றிய விவரங்களைத் தெரிவித்தார். நாகராஜனுடன் விடைபெற்றுக் கொண்டு பிர்லா மந்திருக்குச் சென்றேன்.

பிர்லா மந்திர் என்று சொல்லப்படுவது உண்மையில் பிர்லாவுக்காக அமைந்த ஒரு கோவில் அல்ல. பிர்லாவால் கட்டப்பட்ட கோவில்தான் அது. அந்தக் கோவிலின் முகப்பில் 'ஸ்ரீ சீதாராம் மந்திர்' என்று எழுதப்பட்டிருக்கிறது. அதன் உள்ளே நுழையும்போதே அந்தக் கட்டிடத்தின் தோற்றம், நாட்டரம்பள்ளி மடத்தின் ஸ்ரீராமகிருஷ்ணரின் புதிய ஆலயத்தை நினைவுபடுத்துவதாக இருந்தது.

ராமர், சீதை, லட்சுமணன் ஆகியோர் உள்ள சந்நிதியைக் கொண்ட பெரிய ஹால் அது. அதன் உட்புறச் சுவர்களில் வண்ணச் சலவைக் கல்லில் ராமாயண நிகழ்ச்சிகள் பதிக்கப்பெற்றுள்ளன. அத்துடன் உட்புறச் சுவர்களில் இந்துக்களின் பல வகையான சம்ஸ்கிருதப் பிரார்த்தனை சுலோகங்களையும் மூலம், ஆங்கிலம், இந்தி மொழிபெயர்ப்புகளுடன் கோவிலின் முழுவதிலுமே ஆங்காங்கே காண்கிறோம். கர்ப்பக்கிருகத்தை வலம் வரும் போது இடப் புறத்தில் ஆஞ்சனேயருக்கும், வலப் புறத்தில் யோக நிலையிலுள்ள சிவபெருமானுக்கும் சந்நிதிகள் அமைந்திருக்கக் காண்கிறோம். துளசிதாசர், கபீர்தாசர் ஆகியோரின் திருவுருவங்களையும் சுவரில் சலவைக் கல்லில் வடித்திருக்கிறார்கள். மொத்தத்தில் இங்கு நம்மால் சாந்நித்தியத்தை உணர முடிவதில்லை. ஆகவே ஒரு பொருட்காட்சிசாலைக்குச் சென்று வரும் உணர்வு ஏற்படுகிறதே தவிர, கோவிலுக்குச் சென்று வரும் உணர்வு ஏற்படவில்லை.

பிர்லா மந்திர் என்று சொல்லப்படும் ஸ்ரீ சீதாராம் மந்திருக்கு அடுத்த கட்டிடத்தில் 'பிர்லா தர்மசாலை' அமைந்திருக்கிறது. இங்கு வெளியூர்களிலிருந்து வரும் யாத்திரிகர்களுக்கு வாடகைக்கு அறைகள் தரப்படுகின்றன. ரெயில்வே ஸ்டேஷனுக்கு அருகிலும் பஸ் நிலையத்திற்கு எதிரிலும் அமைந்திருப்பதால் யாத்திரிகர்கள் இங்கே தங்குவதுதான் வசதியானது. இது தவிரவும் டூரிஸ்ட் பீரோ, டூரிஸ்ட் பங்களா, ஆகியவையும் அயோத்தியில் உண்டு. 'அம்மாஜி மந்திர்' என்ற இடத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த எஸ். பார்த்தசாரதி ஐயங்கார் என்பவர் இருக்கிறார். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அயோத்தியாவில் தங்குவதற்கு வேண்டிய வசதிகளை அவர் செய்து தந்து கொண்டிருக்கிறார். நகரத்தார் சத்திரத்தில் வசதிகள் குறைவு. எனவே வசதியாக வாழ்ந்து பழக்கப்பட்டவர்களும் பிராம்மணக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் அங்கே தங்குவதற்கு விரும்ப மாட்டார்கள்.

மாலை நான்கு மணிக்குச் சைக்கிள் ரிக்‌ஷாவில் சத்திரத்திலிருந்து கிளம்பிய நான் இரவு எட்டு மணிக்குத் திரும்பி வந்தேன்.

அயோத்தியாவில் பலவேறு வைணவ சம்பிரதாயத்தினரும் சிறியனவும் பெரியனவுமாகப் பல ராமர் கோவில்களைக் கட்டியுள்ளனர். அவற்றில் பல, தோற்றத்தில் வீடுகளைப் போன்றே அமைந்துள்ளன. நுழைவாயில்களைப் பார்த்து அவற்றை நாம் வீடுகள் என்று நினைத்துவிடக் கூடாது. சுருக்கமாகச் சொல்வதானால், பார்க்கும் இடமெங்கும் சிறியதும் பெரியதுமாக ராமருக்கு இங்கே ஆலயங்கள் உள்ளன. எனினும் முக்கியமான

வற்றை மட்டும் இங்கே பார்க்க வேண்டுமானல் இரண்டரை மணி நேரம் போதுமானது. நகரில் ஆங்காங்கே கோவில்களிலிருந்தோ பாபாஜி மடங் களிலிருந்தோ எப்போதும் நாம சங்கீர்த்தனம் ஒலித்துக் கொண்டிருக்கிறது. சில இடங்களில் அகண்ட நாமபஜனையும் நடைபெறுவதாகக் கேள்விப்பட்டேன். தமிழ்நாட்டில் மூலை முடுக்கு களிலெல்லாம் விநாயகர் எழுந்தருளியிருப்பதைப் போல, காசியில் எங்குப் பார்த்தாலும் சிவலிங்களைக் காண் து போல, அயோத்தில் எங்கே பார்த்தாலும் ராமர் கோவில்களைக் காணலாம். சுமார் 250 கோவில்களுக்குக் குறையாமல் அயோத்தியில் இருக்கும் என்று நினைக்கிறேன்.

அயோத்தி முனிசிபாலிடியைச் சேர்ந்தது ஆனால் ஜனத்தொகை மிகவும் குறைவு. நகரம் என்று சொல்வதைவிடப் பெரிய கிராமம் என்று வேண்டுமானல் இதைச் சொல்லலாம். 'அயோத்தி மாநகரம்' என்று ராமாயணச் சொற்பொழிவுகளில் கேட்டும் படித்தும் பழக்கப்பட்டுவிட்டு 'அயோத்தி கிராமம்' என்று எழுத மனம் வரவில்லை. ஊரிலுள்ள முக்கிய சாலையாகிய 'துளசி மார்க்கில்' பொம்மை, வளையல், துளசிமாலை, பலசரக்குக் கடைகள், புத்தகக் கடைகள் போன்ற எல்லாவிதக் கடை கண்ணிகளும் உண்டு.

அயோத்தியிலுள்ள புத்தகக் கடைகளில் 'அயோத்தியா தர்சன்' என்ற பெயரில் ஒரு புத்தக மும் அந்த நகரத்தைப் பற்றிய வரைபடமும் விற்பனைக்குக் கிடைக்கின்றன. இந்தி தெரியாத நிலையில் 'அயோத்தியா தர்சன்' நூலை நான் வாங்க வில்லை. வரைபடத்தை நான் வாங்கியது ஓரள விற்கு எனக்குப் பயன்படவே செய்தது. இங்குள்ள 'கனக் பவன்', ராமர் பிறந்த இடம், 'அனுமன் கடி' போன்ற சில முக்கியக் கோவில்களின் கர்ப்பக் கிருகங்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளின் வண்ணப்படங்களும், மற்றும் பலவித ஜபமாலை களும் விசேஷமாக அயோத்தியில் விற்பனைக்குக் கிடைக்கின்றன.

அயோத்தியில் நான் சென்ற எல்லா முக்கியக் கோயில்களிலிருந்தும் இடங்களிலிருந்தும், சிறிது சிறிது மண்ணைச் சேகரித்து ஒரு பொட்டலமாகக் கட்டி அயோத்தி யாத்திரையின் நினைவாக வைத்துக்கொண்டேன்.

இந்தத் தொடர்கட்டுரையில் நான் சென்ற பல இடங்களைப் பற்றியும் வர்ணித்திருந்தேன். பெயர் களையும் விளக்கங்களையும் பார்த்து, இவ்வளவு இடங்களையும் சில மணிநேரத்தில் இவரால் எப்படிப் பார்க்க முடிந்தது என்று ஆச்சரியப்படாதீர்கள். இந்த இடங்கள் எல்லாமே அருகருகேதான் அமைந்திருக்கின்றன.

* * *

மறுநாள், அதாவது 22-4-79ஆம் நாள் காலை யில் 5-45க்கு நீராடுவதற்குச் சரயுநதிக்குச் சென்றேன். நீராடச் செல்லும்போதும் திரும்பி வரும்போதும் நான் காண நேர்ந்த ஒரு முக்கிய நிகழ்ச்சியை அவசியம் இங்குக் குறிப்பிட வேண்டும். என் மனதை வெகுவாகக் கவர்ந் ததும் சிந்தனைகளைத் தூண்டியதுமாகிய அந்த நிகழ்ச்சி இதுதான்:

நகரத்தார் சத்திரத்திலிருந்து சரயுநதிக்குச் செல்ல வேண்டுமானல் நகரின் முக்கியச் சாலையாகிய 'துளசி மார்க்' வழியாகத்தான் செல்ல வேண்டும். அந்தச் சாலையில்தான் ஏராளமான கடைகளும் இருக்கின்றன. அது அதிகாலை நேரமாக இருந்த தனல் ஒருசில கடைகள் மட்டுமே திறந்திருந்தன. சில கடைகளை அப்போதுதான் திறந்துகொண்டும் இருந்தார்கள். துளசி பூங்காவைக் கடந்ததும் ஒரு சிறிய பலசரக்குக் கடையில் சுமார் நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி ஜபமாலையை உருட்டி ஜபம் செய்துகொண்டிருந்தார். அதிகாலை நேரம் என்பதால் கடையில் அப்போது வியாபாரம் இல்லை. அதிகாலையில் குளித்து முடித்து நெற்றியில் திருமண் துலங்க அப்படி ஒரு பக்திசிரத்தையுடன் அந்த அம்மாள் ஜபம் செய்வதில் ஈடுபட்டிருந்தார்.

மேற்கொண்டு சென்றுகொண்டிருந்தபோது சாலை யில் சரயுநதியை அடையும் திருப்பம் வந்தது. அங் கும் ஜபமாலை, பொம்மைகள், படங்கள் விற்பனை செய்யும் ஒரு கடையில் நடுத்தர வயதுடைய ஓர் அம்மாள் ஜபமாலையுடன் ஜபம் செய்வதில் ஈடுபட் டிருந்தார். கடையில் வியாபாரத்தைக் கவனிக்கும் தொழிலைக் கொண்ட அந்த இரண்டு பெண்மணி களும் ஜபம் செய்துகொண்டிருந்த முறை, எவரு டைய உள்ளத்தையும் தொட்டு அவர்களை வணங்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவிப்பதாக இருந்தது. சற்றுத் தூரத்தில் ஏறத்தாழ அதே திருப் பத்தில், சரயுநதியில் குளித்துவிட்டு ஒரு மூதாட்டி வந்துகொண்டிருந்தார். அந்த அம்மாளும் ஜப மாலையும் கையுமாகப் பக்தி ததும்ப ஜபம் செய்த படியே வந்துகொண்டிருந்தார்.

இந்த மூன்று பெண்மணிகளும் பக்திபரவசம் பொங்க ஜபம் செய்துகொண்டிருந்த முறை, சில நாட்களுக்கு முன்பு டேராடுன், பிருந்தாவனம், காசி ஆகிய இடங்களில் காண நேர்ந்த சிலரை எனக்கு நினைவூட்டியது.

டேராடுனில் நடந்துகொண்டும், வீட்டின் உள்ளேயிருந்தும், திண்ணைமீது அமர்ந்துகொண்டும் ஜபமாலையை உருட்டி ஜபம் செய்யும் பௌத்த மதத்தைச் சேர்ந்த திபேத்தியப் பாட்டிமார்கள் சிலரைக் கண்டிருந்தேன். அதே ஊரிலே ஆடு மேய்க்கும் இருபத்தைந்து முப்பது வயது மதிக்கத் தக்க இளம் பெண்கள் இருவரும் ஜபம் செய்த நிலையில் ஆடுகளை மேய்ப்பதில் ஈடுபட்டிருந்ததைக் கண்டேன். அந்த இருவருங்கூடப் பௌத்த மதத்தைச் சேர்ந்த திபேத்தியர்களே ஆவர். ஒருவர் மலையடிவாரத்திலும், மற்றொருவர் மலை (சுவாமி விவேகானந்தர் தங்கியிருந்த சிவன் கோயில் அருகில்) மீதுமாக வெவ்வேறு இடங்களில் ஆடுகளை மேய்த்தபடியே ஜபமாலையுடன் ஜபம் செய்வதில் ஈடுபட்டிருந்தார்கள்.

பிருந்தாவனத்தில் ஜபம் செய்பவர்களைப் பற்றியோ சொல்லவே வேண்டாம். ஜபம் செய்த படியே பிருந்தாவனத்தைப் பிரதட்சிணம் செய்து (பரிக்கிரமப் பாதையில்) நடந்து கொண்டிருக்கும் எல்லா வயதுடைய ஆண்களையும் பெண்களையும் அங்கே காணலாம். ஜபம் செய்வதில் வட நாட்டைச் சேர்ந்த வைணவப் பாட்டிமார்கள் ஸ்பெஷலிஸ்ட்டாக இருக்கிறார்கள் என்பதற்குப் பிருந்தாவனம் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

காசியில் மோனத்திலிருந்து எழுந்து வந்த முனிவர்களைப் போன்று, கங்கையில் நீராடிவிட்டுச் சிவசிந்தனையில் தோய்ந்தவர்களாக எதிர்ப்படும் எல்லாச் சிவலிங்கங்களையும் வணங்கி, கையிலுள்ள பாத்திரத்திலிருந்து சிறிது கங்கைநீரையும் பூவையும் சிவலிங்கங்களுக்கு அர்ப்பணித்துக்கொண்டே செல்லும் கிழவிமார்கள் பலரைப் பார்க்கலாம். அவர்களை நினைக்கும்போது அவர்களின் பக்தி நம்மையும் ஆட்கொள்கிறது. எட்ட முடியாத பரம் பொருளைத் தொட்டுவிட்ட உணர்ச்சி இவர்களைப் நினைக்கும்போதே உள்ளத்தில் நிரம்பிக் கண்ணீர் பெருகும். பிறந்தால் காசியில் பிறக்கவேண்டும், வாழ்ந்தால் இந்த மூதாட்டியரைப் போன்று சிவ சிந்தனையுடன் வாழவேண்டும். காசியில் இறந்தால் முக்தி என்று ஒரு நம்பிக்கை உண்டு. ஒருநாளில் காசி மணிகர்ணிகை காட்டிலுள்ள மயானத்திற்குக் கொண்டு வரப்படும் சடலங்களைக் கணக்கிட்டுப் பார்த்தால், அவற்றில் பெண்களின் எண்ணிக்கைத் தான் அதிகமாக இருக்கும். மயானத்திற்குக் கொண்டு வரப்படும் சடலத்தைச் சுற்றியுள்ள துணி வெள்ளை நிறத்துடன் இருந்தால் அது ஆண் சடலம். வேறு நிறத்துடன் இருந்தால் அது பெண் சடலம். காசி விசுவநாதரைத் தரிசிப்பதில் பக்திபூர்வமாக ஈடுபட்டிருக்கும் மூதாட்டிகளைக் காணும்போது, பகவான் இவர்களுக்கு முக்தி தருவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை என்ற எண்ணம்தான் தோன்றும்.

காசியில், வருணை நதி சங்கமத்திற்கும் அசி நதியின் சங்கமத்திற்கும் இடையிலுள்ள கங்கையில் சுமார் ஐம்பது நீர்த்துறைகள் இருக்கின்றன. அவற்றுள் ஒவ்வொன்றுக்கும் ஒரு பெயர் உண்டு. ஒவ்வொரு நீர்த்துறையும் ஏதாவது ஒரு விதத்தில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. அயோத்தியில் சரயுநதியில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக ராம் காட், வாசுதேவ காட், லட்சுமண் காட் எனப்படும் மூன்று துறைகள் இருக்கின்றன.

நதியில் நீராடிவிட்டு நகரத்தார் சத்திரத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். அப்போது சீருடை அணிந்த ஓர் இளைஞர் வேகமாக ஓடி வந்து கொண்டிருந்தார். பிறகு சென்றுகொண்டிருந்தபோது அடுத்தடுத்து அதே விதத்தில் பனியனும் கால்சட்டையுமாகச் சீருடை அணிந்த இளைஞர்கள் பலர் வேர்க்க வேர்க்க ஓடி வந்துகொண்டிருப்பதைக் கண்டேன். பிறகுதான், அவர்கள் ஏதோ ஒரு ஹாஸ்டலைச் சேர்ந்தவர்கள் என்றும், உடற் பயிற்சிக்கு உரிய உடையில் ஜன நடமாட்டம் இல்லாத காலைநேரத்தில் ஓடும் பயிற்சியில் நாள்தோறும் ஈடுபடுகிறார்கள் என்றும் சத்திரத்தில் கார்த்திகேயனின் மூலம் அறிந்தேன்.

பிறகு கார்த்திகேயனிடம் ‘அம்மாஜீ மந்திர்’ உள்ள இடத்தை விசாரித்துக்கொண்டு பார்த்த சாரதி ஐயங்கார் அவர்களைச் சந்திக்கப் புறப் பட்டேன். எனக்கு இந்தி தெரியாத நிலையிலும் அங்குள்ளவர்களுக்கு ஆங்கிலம் தெரியாத நிலையிலும், மிகுந்த சிரமத்தின் பேரில்தான் அம்மாஜி மந்திரை என்னால் கண்டுபிடிக்க முடிந்தது. தமிழ் நாட்டிலிருந்து ஒரு வைணவக் கோவிலை அயோத்திக்குத் தூக்கிக் கொண்டு வந்து வைத்ததைப் போல, கோபுரத்துடன் கூடிய கோயில் அங்கு இருக்கிறது. ‘மதராஸ் மந்திர்’ என்றும் அதை அங்கே சொல்கிறார்கள். சென்னை, திருவல்லிக்

கேணியைச் சேர்ந்த சிலர் அந்தக் கோவிலை அங்குக் கட்டியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்தக் கோவிலில் நான் சந்தித்த ஒருவருக்குக் ஆங்கிலம் தெரியாத நிலையில் நான் சிரமப்பட்டுக் கொண்டிருந்தபோது, தமிழ்நாட்டைச் சேர்ந்த மடிசார் மாமி ஒருத்தி எதிர்ப்பட்டு, ''எஸ். பார்த்த சாரதி ஐயங்காரை அனுமன்கடிக்கு அருகில் பார்க்க லாம்'' என்று தமிழில் கூறினர்.

பார்த்தசாரதி ஐயங்காரைப் பற்றி ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்ததனுல் அவரைச் சந்திக்க நினைத்திருந்தேன். மதராஸ் மந்திரில் அவரைச் சந்திக்க இயலாத நிலையிலும், அன்று பகல் நான் அயோத்தியிலிருந்து கிளம்ப வேண்டியிருந்த நிலையி லும், பார்த்தசாரதி அவர்களைச் சந்திக்கும் முயற்சியை அத்துடன் கைவிட நேர்ந்தது.

காலை 8-30 மணி அளவில் அங்கிருந்து நேராக மீண்டும் சரயுநதிக்குச் சென்றேன். அப்போது அங்குள்ள மயானத்தில் ஒரு சடலத்திற்குக் கட்டை களை அடுக்கிக்கொண்டிருத்தார்கள். மேற்கிலிருந்து கிழக்காக நதியின் கரையையொட்டியே இரண்டு மூன்று பர்லாங் தூரம் நடந்து சென்றேன். ஓர் இடத்தில் ஆமை தன் குட்டியுடன் கரையோரத்தில் இருந்தது. இராமபிரான் பிறந்த அயோத்தியில் அவற்றைக் கண்டபோது, கண்ணபிரான் பிறந்த மதுராவிலுள்ள 'சியாம குண்டம்' எனது நினைவுக்கு வந்தது. சியாம குண்டத்தில் நீராடச் சென்றபோது அதில் பெரிய ஆமைகள் இருப்பதைக் காண நேர்ந்தது.

[அடுத்த இதழில் முடியும்]

செங்கத்தில் ஸ்ரீராமகிருஷ்ண — விவேகானந்த மன்றத்தின் துவக்க விழா

☆ வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த செங்கம் நகரத்தில் 29-7-79ஆம் நாள் எஸ். பாண்டு ரங்கன் அவர்களைத் தலைவராகவும், எஸ். ராமமூர்த்தி அவர்களைச் செயலாளராகவும் கொண்டு 'ஸ்ரீராம கிருஷ்ண—விவேகானந்த மன்றம்' என்ற அமைப்புத் துவக்கப்பட்டது. ஜூலை 29ஆம் நாள் மாலை பயணிகள் விடுதியிலிருந்து பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், அருள் அன்னை ஸ்ரீசாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் திருவுருவப் படங்களை ஏந்திய நிலையில் மாணவர்களும் பொதுமக்களும் ஸ்ரீ வேணுகோபால பார்த்தசாரதி ஆலயத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். ஊர்வலத்தின் முன்னுல் நாதஸ்வரம் போன்ற வாத்திய கருவிகள் முழங்க, அதைத் தொடர்ந்து பொதுமக்களும் மாணவர்களும் நாமாவளிகளையும் பக்திப் பாடல்களையும் பாடிய நிலையில் சென்றனர்.

இரவு 7 மணிக்கு ஸ்ரீவேணுகோபால பார்த்தசாரதி ஆலயத்திலுள்ள மண்டபத்தில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீசாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் பெரிய அளவிலான திருவுருவப் படங்களைத் திறந்து வைத்து, ஸ்ரீமத் சுவாமி குமாரானந்தர் அவர்கள் ஸ்ரீராமகிருஷ்ண— விவேகானந்த மன்றத்தைத் துவக்கி வைத்தார். குயிலம் கிராமத்தில் மிகச் சிறந்த முறையில் இயங்கி வரும் 'ஸ்ரீராமகிருஷ்ண—விவேகானந்த உழவர் மன்றம்' என்ற அமைப்பின் துணைத் தலைவராகிய திரு வி. நடராசன் அவர்களின் இறைவணக்கப் பாடலுடன் பொதுக்கூட்டம் துவங்கியது. அடுத்து ஸ்ரீமத் சுவாமி குமாரனந்தர் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகித்து அருளுரை வழங்கினர். டாக்டர் ஜி. கார்த்திகேயன், பேராசிரியர் ஏ. சுப்பிரமணியம், டாக்டர் அ. கணேசன் ஆகியோர் முறையே சுவாமி விவேகானந்தர், அன்னை ஸ்ரீ சாரதாதேவியார், ஸ்ரீராமகிருஷ்ண—விவேகானந்த மன்றங்கள் ஆகிய தலைப்புகளில் உரையாற்றினர். கவிஞர் மா. சோதி அவர்கள் 'ஒரு துறவியின் சேவை' என்ற தலைப்பில் சுவாமி விவேகானந்தரைக் குறித்தத் தமது கவிதையை அரங்கேற்றினர். அடுத்து ஸ்ரீமத் சுவாமி கமலாத்மானந்தர் அவர்கள் 'பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்' என்னும் தலைப்பில் நிகழ்த்திய சிறப்புச் சொற் பொழிவுடன் இரவு 9-15 மணிக்கு பொதுக்கூட்டம் நிறைவு பெற்றது.

பொதுக்கூட்டத்திற்குப் பிறகு 'சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாறு' சினிமாப் படம் கோவிலின் முன்னுல் திரையிடப் பெற்றது.



திருமகள் எங்கே வசிப்பாள்?

'நரேந்திரன்'

ஒரு பணக்கார சேட்ஜி ஒரு நாள் இரவு தூங்கிக்கொண்டிருந்தார். அப்போது அவருடைய கனவில் மகாலட்சுமி தோன்றினாள். அவள் அவரிடம், ''சேட்ஜி! நீ செய்த புண்ணியச் செயல்கள் காரணமாகவே நான் இவ்வளவு காலமாக உன்னுடன் இருந்து வந்தேன். ஆனால் இன்றைய தினத்தோடு நீ செய்த புண்ணியம் தீர்ந்துவிடுகிறது. ஆகவே நான் உன் வீட்டை விட்டு இன்னும் சில நாளில் சென்றுவிடப் போகிறேன். அதற்குள்ளாக உனக்கு என்னிடமிருந்து ஏதாவது வரம் கேட்கத் தோன்றினால் இப்போதே கேட்டு வாங்கிக்கொள். ஆனால் உன் வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும் என்று மட்டும் என்னை கேட்கக் கூடாது'' என்றாள்.

சேட்ஜி திருமகளிடம் மறுநாள் காலையில் தம் குடுபத்தினர்களைக் கலந்து ஆலோசித்த பிறகு ஏதாவது வரம் கேட்டு வாங்கிக் கொள்வதாகக் கூறினார்.

பொழுது விடிந்தது. சேட் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரையும் அழைத்து, கனவில் நடந்தவற்றைக் கூறினார். சேட்டின் மனைவி, ''முத்து வைரம் போன்றவற்றை கேளுங்கள்'' என்று யோசனை கூறினாள். மூத்த மகன், ''ஏராளமான பொற்குவியலைக் கேட்கலாம்'' என்று சொன்னான். இரண்டாவது மகன், ''உணவுப் பண்டங்களைக் கேளுங்கள்'' என்று கூறினான். மற்றும் சில உறவினர் வீடு வாகனம் ஆகியவற்றை கேட்கும்படி யோசனை தெரிவித்தார்கள்.

இவ்விதம் எல்லோரும் சொல்லி முடித்த பிறகு, வீட்டின் கடைக்குட்டி மகனின் மனைவி வந்தாள். அவள் மாமனாரிடம், ''அப்பா! இதுவரை அனைவரும் சொன்னபடி நீங்கள் தேவையான வைரம் பொன் வீடு மாடு உணவு ஆகியவற்றை கேட்டாலும்கூட, எப்போது திருமகள் உங்களை விட்டு நீங்குகிறேன் என்று செல்லிவிட்டாளோ அப்போது இவையும் நிலைக்காமல் அவளுடனே சென்றுவிடும் என்பது நிச்சயம். எனவே நீங்கள் இவற்றைக் கேட்டாலும் கிடைக்கமாட்டா; கிடைத்தாலும் நிலைத்திருக்கமாட்டா. ஆகவே, தாங்கள் 'எங்கள் குடும்பத்தில் எப்போதும் பரஸ்பர அன்பு நிலைத்திருக்கட்டும்' என்று கேளுங்கள். குடும்பம் என்று இருந்தால் கஷ்ட நஷ்டங்கள் வரத்தான் செய்யும். குடும்பத்தில் பரஸ்பரம் அன்பு நிலைத்திருந்தால் கஷ்டகாலத்திலும் வாழ்க்கை நிம்மதியாகக் கழியும்'' என்று சொன்னாள்.

சேட்டுக்கும் சிறிய மருமகள் சொன்னதே சரி என்றுபட்டது.

மறுநாள் இரவு வந்தது. கனவில் மறுபடியும் திருமகள் தோன்றினாள். உடனே சேட் திருமகளிடம், ''தேவி! தாங்கள் என்னை விட்டுச் செல்ல விரும்பினால் மகிழ்ச்சியுடன் செல்லுங்கள். ஆனால் செல்வதற்கு முன்பு தாங்கள் எனக்கு ஒரு வரம் தரவேண்டும். அதாவது எங்கள் குடும்பத்தினர்களுக்கிடையில் எப்போதும் பரஸ்பரம் அன்பு நிலைத்

திருக்கவேண்டும். இதுவே நான் கேட்கும் வரம். இந்த வரத்தை மட்டும் தாங்கள் அருளிச் செய்தால் போதும்'' என்றார்.

திருமகள் புன்முறுவல் பூத்தபடி, ''மகனே! இப்படி ஒரு வரத்தைக் கேட்டதன் மூலம் என்னை நீ உன் வீட்டிலேயே கட்டிப் போட்டு விட்டாய். எந்தக் குடும்பத்தினர் ஒருவருக்கொருவர் பரஸ்பர அன்புடன் வாழ்கிறார்களோ, எந்தக் குடும்பத்தினருக் கிடையில் சண்டைசச்சரவு இல்லையோ, அங்கு நான் நிச்சயமாக இருந்தே தீருவது என்று விரதம் வைத்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே குடும்பத்தில் அன்பு நிலவ வேண்டும் என்ற வரத்தைக் கேட்கும் உன் குடும்பத்தை விட்டு நான் எப்படி செல்ல முடியும்?'' என்று சொல்லிக்கொண்டே திருமகள் அந்தக் குடும்பத்திலேயே நிலையாகத் தங்கி விட்டாள்.

ஒரு சமயம் திருமகள் இந்திரனிடம், ''இந்திரனே! எந்த வீட்டில் குருக்களை (ஆசிரியர்களை) மதித்து வழிபடுகிறார்களோ அந்த இடத்திலும், பிறகு எங்கு நாகரிகமான முறையில் மரியாதையோடு பழகுகிறார்களோ அந்த இடத்திலும், எவர் தங்கள் வாயால் (பிறருடைய செய்கை காரணமாக மனதில் கோபம் ஏற்பட்டாலும்) சண்டை செய்யா மல் இருக்கிறார்களோ அந்த இடத்திலும் நான் வசிக்கிறேன்'' என்று தெரிவித்ததாகப் புராண வரலாறு கூறுகிறது.

ஆதிசங்கரரின் நிர்வாண சதகம்



நான் மனமும் அறிவும் எண்ணமும் நான் என்ற அகந்தையும் உள்ளவ னல்லன். செவிமடுத்தலும் ருசியும் நுகர்தலும் பார்வையும் நானல்லன். வானமும் பூமியும் நீரும் காற்றும் நானல்லன். சிதானந்த ரூபமாகிய நானே சிவம், நானே சிவம்.

பிராணன் என்று அழைக்கப்படுவதும் நானல்லன். பஞ்சவாயுக்களும், உடலை உண்டாக்கும் ஏழு அங்கங்களும், ஐந்து மூடுபொருள்களும், செயற் பாட்டின் ஐந்து அவயங்களும் நானல்லன். சிதானந்த ரூபமாகிய நானே சிவம், நானே சிவம்.

வெறுப்புடையவனும் நானில்லை. பற்றிக்கொள்பவனும் நானில்லை. பேராசையும் எனக்கு இல்லை. நான் மாயையும் அல்லன். அசூயையும் கர்வமும் கடமையும் காரியமும் ஆசையும் சுதந்திரமும் எனக்கு இல்லை. சிதானந்த ரூபமாகிய நானே சிவம், நானே சிவம்.

புண்ணியமும் பாவமும் நானல்லன். மகிழ்ச்சியும் துக்கமும் நானல்லன். புனித வார்த்தையும் புனித யாத்திரையும் நானல்லன். வேதமும் தியாகமும் நானல்லன். மகிழ்ச்சி அடைபவனும் மகிழ்ச்சி யுறும் பொருளும், மகிழ்ச்சியடைந்துகொண்டிருப்பவனும் நானல்லன். சிதானந்த ரூபமாகிய நானே சிவம், நானே சிவம்.

எனக்கு இறப்பும் பயமும் ஜாதிபேதமும் இல்லை. தந்தை எனக்கு இல்லை. தாயோ பிறப்போ இல்லை. நண்பரோ உறவினரோ இல்லை. எஜமானரோ சிஷ்யனோ எனக்கு இல்லை. சிதானந்த ரூபமாகிய நானே சிவம், நானே சிவம்.

மாறுபாடும் உருவமும் அற்றவன் நான். எங்கும் வியாபித்திருப்பதன் மூலம் நீக்கமற நிறைந் திருக்கும் பரம்பொருள் நான். இந்திரியங்களில் எனக்குப் பற்று இல்லை. இந்திரியங்களால் அறியப் படாதவனாகிய எனக்கு முக்தி நாட்டம் தேவை இல்லை. சிதானந்த ரூபமாகிய நானே சிவம், நானே சிவம்.

—தமிழாக்கம்: எஸ். திலகவதி



யோகமும் ஞானமும்

பேராசிரியர் ப. இராமன், எம். ஏ.

சைவசித்தாந்தம், யோகமார்க்கத்தை சகமார்க்கம் என்று கூறுகிறது. இது அகத்தொழில் மாத்திரையால் அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் பூசையாகும். இந்தப் பூசையைச் செய்பவர்கள் இறைவனின் திருவுருவத்தைப் பெறுவார்கள். அதாவது சாருபநிலை அடைகிருர்கள்.

யோகநிலையாவது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளையும் புலன்களையும் அடக்குவதாகும். இடகலை, பிங்கலை (இடமூக்கு, வலமூக்கு) நாடிகளை அடக்கவேண்டும். பிராணவாயுவை இந்த இரண்டு நாடிகளில் செல்லவிடாமல் அடக்க வேண்டும். சுழுமுனை நாடி எனும் நடுநாடியில் பிராணவாயுவை ஓடச் செய்து, மூலாதாரத்தில் உள்ள குண்டலியை எழுப்பவேண்டும். அது சுழுமுனை வழியே செல்லும்போது சிலம்பொலி கேட்கும். இடகலை பிங்கலை சுழுமுனை மூன்று நாடிகளும் கூடுகிற திரிவேணியாக விளங்கும் புருவமத்தியில் (மேரு என்பர், பிரமரந்திரம் என்பர்) அமுதத்தை உருக்கிப் பருக வேண்டும். (மூலாதாரம் முதல் ஆறு ஆதாரங்களையும் எழுப்பிப் புருவமத்தியில் கூட வேண்டும்.) உடல் முழுவதும் அமுதம் பரவும். உடல் உபாதை எதனுலும் தளருதல் கூடாது.

இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற எட்டு அங்கங்களை உடைய அட்டாங்க யோகம் பழக வேண்டும். இதனுல் நமது வினைகள் தீரும். இதைச் செய்து முடிப்பவர்களே ஜீவாத்மாவுடன் கலந்திருக்கும் பரமாத்மாவைக் காண முடியும். யோகத்தில் நிலைபெறும்போது மட்டுமே ஒருவர் உள்ளக் கமலத்தில் எழுந்தருளியுள்ள பரமாத்மாவைக் காண இயலும். திரைப்படம் வெள்ளித் திரையில் காட்டும்போது மட்டுமே தோன்றுகிறது. காட்டாதபோது திரை மட்டுமே இருக்கிறது. இதைப் போன்றே யோகத்தில் இருக்கும்போது மட்டுமே இறைவன் காட்சி கிட்டுகின்றது. யோகத்தில் இல்லாத நிலையில் இறைவனின் காட்சி கிட்டுவதற்கு வழியில்லை. யோகத்தில் நான்கு நிலைகள் இருக்கின்றன. அவை முறையே சமயம், விசேடம், நிருவாணம், அபிடேகம் எனப்படும்.

சமயம் -பலவகையான யோகமுறைகளை நினைத்தல்
விசேடம் - எட்டு உறுப்புடன் கூடிய யோகம்
நிருவாணம் - முழுமுதற் சிவன் தோன்றல்
அபிடேகம் - சித்தி பெறுதல்

காண்பான், காட்சி, காட்சிப் பொருள் ஆகிய மூன்றும் திரிபுடி எனப்படும். அவற்றுள் யோக நிலையில் காண்பானும் காட்சியும் மறைந்து காட்சிப் பொருளாகிய இறைவன் மட்டுமே தெரிவான். அதாவது தியானிப்பவனும் தியானமும் தோன்ருமல் தியானப் பொருளாகிய சிவன் மட்டுமே தோன்றும். இவ்வித லயத்தை அடையும் சிவயோகிகள் சிவன் உருவத்தைப் பெறுவார்கள். அது வேட்டுவன் என்ற செங்குளவி ஒரு பசுமையான மண்புழுவை மண் கூட்டுக்குள் அடைத்து நாளும் விடாமல் அதனைக் கொட்டிக் கொட்டிக் குளவியாக மாற்றுவதைப் போன்றது என்று சொல்லாம். இதையே ''புவியில் வேட்டுவன் எடுத்த மென்புழுப் போல்'' என்று திருவாதவூரடிகள் புராணமும் கூறுகிறது இதைப் பிரமரகீட நியாயம் என்பார்கள்.

திக்குக் காவலர்களில் வடகிழக்குத் திசையாகிய ஈசான்ய திசையைக் காப்பவர் ஈசான்யர். இவர் ஸ்படிகநிறம், முக்கண், திரிசூலம், ரிஷபவூர்தி ஆகியவற்றுடன் விளங்குபவர். இவர் சிவசாருபம் பெற்ற படைத்தலைவர். குற்றம் புரிந்தவர்களுக்குத் தக்க தண்டனை வழங்கும் தலைவர். சூரபன்மன் ஏனைய திசைக்காவலர்களை வென்ருன். இந்தத் திசையின் தலைவர் தமக்கு உதவிய ஈசனையே முற்றும் ஒத்திருந்ததால் அவரோடு போரிடாமல் திரும்பிச் சென்ருன் என்று கந்தபுராணம் கூறுகிறது. இந்தச் சான்ருலும் சாருபநிலை அடைவது உண்மை என்பது புலனுகும்.

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே.

என்று திருமூலரின் திருமந்திரம் கூறும் உண்மையினை உணர்க. பூவும் அதனுள் பரவியிருக்கும் மணமும், கட்டுத்தறியும் அதனில் கட்டுண்ட புழுகு பூனையும் (நாவி) போன்று ஜீவாத்மாவானது பரமாத்மாவுடன் பொருந்தியுள்ளது.

இந்தச் சகமார்க்கமாகிய யோகநெறியில் நின்றவர் சுந்தரமூர்த்தி நாயனர் என்பது குறிப்பிடத் தக்கது.

இனி, சன்மார்க்கம் எனப்படும் ஞானநெறியைக் காண்போம். சரியையில் உருவும், கிரியையில் அருவுருவும், யோகத்தில் அருவமும் ஆகத் தொழப் படுகிறது. இவற்றிற்கெல்லாம் மேலான நிலையான ஞானத்தில் அருவம் கடந்த நிலையில் இறைவனை அறிந்து இணைதல் வேண்டும். எங்கும் நீக்கமற நிறைந்துள்ள அகண்டாகார சோதியாக அகத்தும் புறத்தும் எப்போதும் காணவேண்டும். எங்கும் பரவியுள்ள பரம்பொருள் தன்மையை உயிருக்கு உயிராய் நிற்கும் தன்மை என்று திருமூலர் கூறுகிறுர். நமது கண்ணுக்குப் புலப்படாத அருவப்பொருள் காற்று. அதனுள்ளிருந்து இயக்குபவன் அருவம் கடந்த பொருள். அவனே பரம்பொருள். உள்ளும் புறமும் பரவியுள்ள பரம்பொருளை எப்பொருளிலும் எப்போதும் காண்பதே ஞானம். உருவம், அருவுருவம், அருவம் ஆகிய தோற்றமாகவும் இவற்றுள்ளும் கலந்திருப்பவனே பரம்பொருள். எங்கும் இறுத்தலால் இறைவனுகிருன்.

நான்கு வேதங்கள், புராணங்கள், சகலகலைகள், பல சமயங்களின் சாத்திரங்கள் அனைத்தையும் கற்றுத் தெளிந்தாலும் இவையெல்லாம் சிற்றறிவே என்று உணரவேண்டும். பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையைத் தெளிய அறிதல் வேண்டும். பரமசிவனை அறியும் சிறந்த மார்க்கமான ஞானத்தை நாட வேண்டும். அதனுல் ஞானம், ஞேயம், ஞாதா என்னும் திரிபுடி இல்லையாக வேண்டும். மனம் முழுவதும் சிவபோதமே விரிந்து நிரம்ப வேண்டும். இந்த மேலான நிலையைப் பெறுவதற்குரிய வழியாதெனில், எங்கும் நிறைந்துள்ள ஒலி முதலாகிய நாதமெய்யும், அதுபோன்று பரந்த தன்மையுள்ள மனமும், அந்த மனம்பற்றி ஐயுற்ற பொருளை உறுதி செய்வதாகிய புத்தியும், அந்தப் புத்தியினை எழுப்புவதான அகங்காரமும், சீர்தூக்கிப் பார்க்கிற சித்தமும் ஆகிய ஐந்தனுள் சித்தம் மனதுள் அடங்குவதாலும், நாதம் இவற்றைத் தொழிற்படுத்துவதாலும் ஏனைய மனம், புத்தி, அகங்காரம் ஆகிய மூன்று அந்தக் கரணங்களும் சிறந்தவை. இவற்றை அடக்கி நாதகலையையும் கடந்தவரே ஞானியராவர்.

தான் சார்ந்திருக்கிற நிலையற்ற மாயாகாரியமாகிய உலகமும் தன்னேடு தொடர்புடைய உடம்பும் நிலைபெற்ற இறைவனின் திருவருளால் கிடைத்தன. இவற்ருல் சிவபெருமானிடத்து நீங்காக் காதல் கொண்டொழுக வேண்டும். அவ்விதம் செய்பவன் அந்தச் சிவத்துள் அடங்கித் தானே சிவமாகப் பொலிவான்.

பிண்டத்தில் இருப்பது அந்தரான்மா. அண்டத்தில் இருப்பது பரமான்மா. ஆகாசமானது நம் உள்ளும் இருக்கிறது, வெளியிலும் இருக்கிறது, இரண்டும் ஒன்றே. இது போன்றே அந்தரான்மாவும் பரமான்மாவும் ஒன்றே. ஆன்மாவை நெருப்பு என்றும், அதன் சூட்டைச் சிவம் என்றும், ஒளியை மாயை என்றும் உவமையாகக் கூறுவார்கள். நெருப்பின் சூடு உள்ளும் புறமும் பரவியிருப்பது போலப் பரசிவமும் எங்கும் உள்ளும் புறமும் பரவியிருக்கிறது.

''விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்''

என்று திருநாவுக்கரசர் மொழிந்தமைக் காண்க.

''நோக்கரிய நோக்கே, நுணுக்கரிய நுண்ணுணர்வே
காக்குமெம் காவலனே காண்பரிய பேரொளியே''

எனத் திருவாசகத்துச் சிவபுராணம் கூறுவதும் மேற்கூறிய பரம்பொருள் தன்மையை விளக்குகிறது.

இந்தப் பரசிவ ஞானத்தைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் சோபனங்களால் (ஏறுபடிகள்) பெறலாம். அல்லது இறைவன் திருவருளாலும் குருவருளாலும் பெறலாம்.

''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே''

—காசியாத்திரை

என்னும் அடிகளும் இந்தக் கருத்தை அரண் செய்யும். ''அவன் அருளாலே அவன்தாள் வணங்கி'' என்று திருவாசகமும், ''குருவருளின்றேல் அருள் வரலின்றே'' என்று ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் ஞானவாக்கியமும் இந்தக் கருத்தை அரண் செய்கின்றன. அவன் அருளால் ஆணவமலம் நீங்கி,

[295-ஆம் பக்கம் பார்க்க]

சுவாமி பிரேமானந்தரின் போதனைகள்

[ஒரு துறவிக்கு] ஸ்ரீராமகிருஷ்ணர் உன்னைக் கவனித்துக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார் என்ற நிச்சயத்துடனும் திடமான நம்பிக்கையுடனும் இரு. அப்படி இருந்தால் 'பொங்கி எழும் உலகமாகிய கடல் ஒரு மாட்டின் குளம்படியில் தேங்கும் நீர் போல் குன்றிப் போகும்.'

தூய உடலிலும் உள்ளத்திலும் ஆண்டவனுடைய சக்தி வெளிப்படும். கடவுளைப் பற்றியே இடைவிடாமல் நினைத்துக்கொண்டிரு. மனதின் மலங்கள் கரைந்து ஓடிப்போகும். உனக்குத் தூய அன்னையின் அருள் இருக்கிறது என்பதை எப்போதும் நினைவில் வைத்துக்கொள். நீங்கள் அவருடைய குழந்தைகள்; நீங்கள் உலகப் பற்று நீங்கியவர்கள். அந்த நம்பிக்கையில் வாழ்ந்து செயல்பட வேண்டும். ஞானம், அன்பு, தூய்மை ஆகியவைதான் நமது உண்மையான இயல்புகள். புகழ், பெருமை, பதவி ஆகியவை எல்லாம் நமது இயல்பிற்கு மாறானவையே ஆகும். அவற்றை நாடி நமது மனம் செல்லாமலிருக்கட்டும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் இந்த யுகத்தின் அவதார புருஷர். அவருடைய உபதேசங்கள் இந்த உலகம் முழுவதும் பரவும். அதன்மூலம் பூவுலகில் அமைதி நிலவும்.

எல்லாச் சக்தியும் எல்லா அறிவும் நிறைந்த இறைவனைப் போற்று. பலவீனம் பறந்து போய் விடும். உன் வாழ்க்கை புனிதமாகும். உன்னிடம் ஆனந்தம் நிலைபெறும்.

பகவானின் திருவருளால் பாவியும் மகான் ஆகிறான். நாம் அஞ்ஞானமாகிய அழுக்கு மூடிய இரும்பைப் போல இருந்தாலும் ஸ்பரிசவேதிகளைப் போன்ற ஸ்ரீராமகிருஷ்ணரும் தூய அன்னையாரும் தொட்ட மாத்திரத்தில் தங்கமாகிவிட்டோம். அவர்களின் கிருபையால் நாம் உயர்ந்துவிட்டோம். பிறவிப் பயனை எய்திவிட்டோம். இந்த மனிதப் பிறவி எடுத்த நாம் உயர்வற உயர் நலத்தை அடைந்தவர்களாகிவிட்டோம்.

நல்ல நம்பிக்கை இருக்கட்டும். ஸ்ரீராமகிருஷ்ணருடைய நாமத்தை உபதேசம் பெற்றிருக்கிறாய். நீ முக்தி எய்துவாய். இந்தப் பிறவியிலேயே பரிபூரண நிலை அடைவாய். இதை நிச்சயமாக நம்பு. இதில் ஒரு சிறிதுகூடச் சந்தேகம் வேண்டாம். பகவந் நாமத்தைப் பஜனை செய்; பயம் பறந்தோடிப் போகும். உன் உள்ளத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

நீங்கள் கருமத்தளையில் கட்டுப்பட்ட ஆன்மாக்கள் என்ற எண்ணத்திற்கு இடம் கொடுக்க வேண்டாம். நீங்கள் முக்தி எய்தியவர்கள். ஆம், முக்தி எய்தியவர்கள். பகவந்நாமத்தைப் பஜனை செய்யுங்கள் யமனும் உங்களை அணுக அஞ்சுவான்.

சத்தியத்தைச் சரணடையுங்கள். ஆண்டவனுக்கு ஆத்ம சமர்ப்பணம் செய்யுங்கள். உள்ளத்தையும் உதட்டையும் ஒன்றாகவே இருக்கச் செய்யுங்கள். உங்கள் உள்ளத்தில் உறையும் எண்ணங்களை உணர்ந்த இறைவன் உங்களைக் காப்பாற்றுவான். பாசாங்கும், கெட்ட எண்ணங்களும், சுயநலமும் எங்கு இருக்கின்றனவோ அங்கேதான் அச்சமும், வேதனைகளும் கவலைகளும் இருக்கும். தூண் போன்று இருக்கும் (ஸ்தாணு நாதனாகிய) தெய்வத்தைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டவன் தனக்கு வழிகாட்டும் திசைக் கருவியை உடையவனாவான். அவனை அசைக்க முடியாது, அழிக்க முடியாது. அவனுக்கு எங்கும் வெற்றி, எக்காலத்தும் முக்தி.

சுவாமிஜியின் (விவேகானந்தரின்) கடிதங்களைப் படி; அதன்மூலம் வலிமையும் தைரியமும் உனக்கு வரும். மனித நிலையைக் கடந்து நிற்கும் அதிசயமான உதாரண புருஷன் வழிகாட்டியாக உனக்கு இருந்தும் இன்னும் பயமா? ஸ்ரீராமகிருஷ்ணரை வழிபடுபவர்கள் யமனை எதிர்ப்பதற்கும் அஞ்சுவதில்லை. இன்னும் பயம் இருக்கிறதென்றால் நீ என்ன பூஜை செய்கிறாய்? அது என்ன, பேயா பிசாசா?

இந்த ஆசிரமம் நமது பிரபுவாகிய ஸ்ரீராமகிருஷ்ணரைச் சேர்ந்தது. அவர்தாம் நம்மை ஆட்டி வைப்பவர்; அவருடைய வேலையை அவர் செய்து

கொள்வார். ஆசிரமம் உன்னுடைய விருப்பத்தால் தோன்றியதா? உன் முயற்சியாலேயே நீ முன்னேறலாம் என்று நினைக்கிறாயா? நமது பிரபு அனைத்தையும் நடத்துகிறார். "என்னுடைய ஜகன் மாதா எல்லா உயிர்களிலும் உறைகிறாள்; அவள் விருப்பப்படியே எல்லாம் இயங்குகின்றன."

ஆண்டவனுடைய வேலையைச் செய்ய மனிதனுக்குத் தானாகவே சக்தி இல்லை. நீ காணும் நல்ல வேலை எல்லாம் தெய்விகச் சக்தியின் செயல்; அது பராசக்தியின் பெருமையை வெளிப்படுத்துகிறது; அது மனதிற்கு எட்டாதது. கடவுளுடைய சக்தியால் வலிமை கொண்டவனாக இரு. அவருடைய கையில் உள்ள ஒரு கருவி என்று நீ உன்னை நினைத்துச்செயலில் ஈடுபடு. அது உனக்குச் சாந்தியையும் மகிழ்ச்சியையும் கொண்டு வரும்.

அஞ்ஞானத்தால் கவரப்பட்டு மனிதன் கோபத்திற்கும் அகங்காரத்திற்கும் அடிமையாகிறான். காமக்ரோதங்களுக்கும் அகங்காரத்திற்கும் வசப்படாமலிருப்பதுதான் வைராக்கியம் எனப்படும். அதை அடையத்தான் மனிதன் ஆன்ம சாதனைகளைக் கைக் கொள்ளுகிறான். மனதில் காமக்ரோதங்களுக்கு இடம் கொடுத்தால் நீ அழிந்து போவாய்—காமமும் குரோதமும் பிசாசுகள். அவை உள்ளத்தில் தலைகாட்டினால் கண்ணீர்விட்டு ஆண்டவன் முன்னிலையில் கதறிப் பிரார்த்தனை செய். அவருடைய அருளால் அவை பறந்து போகும். அகங்காரமோ அது ஒரு நரகம். இந்த அகங்காரம்தான் உலகம் முழுவதையும் மயக்குகிறது. உத்தமமான தவ வலிமையால்தான் ஒருவன் அகங்காரத்தின் பிடியிலிருந்து விடுபட முடியும்.

மனித வாழ்க்கையின் ஒரே இலட்சியம் பக்தியும் சிரத்தையும் கொண்டிருப்பதுதான். அது இல்லாத உலக வாழ்க்கை ஒரு பாலைவனம்தான். முன்னேறிச்செல். உனக்குப் பக்தியும் சிரத்தையும் சித்திக்க வேண்டும் என்றும், எல்லோருடைய நன்மைக்காகவும் எல்லோருடைய இன்பத்திற்காகவும் நீ வாழ வேண்டும் என்றும் பிரார்த்திக்கிறேன்.

உன் சகோதரன் இறந்துவிட்டதைக் கேட்டு நான் வருந்துகிறேன். ஆனால் உடல் எடுத்த எந்த ஜீவன்தான் துன்பத்திலிருந்தும் நோயிலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுபட முடியும்? 'பிரம்மாவும் கூடப் பஞ்ச பூதங்களாகிய வலையில் சிக்கிக் கொண்டு அழுகிறார்' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வது வழக்கம். இந்த அஞ்ஞான வலையிலிருந்து விடுபடுவதற்குப் போராடும் மனிதனுடைய வாழ்க்கைதான் பயனுடைய வாழ்க்கையாகும். அந்தர்யாமியாக உறையும் ஆண்டவனைச் சரணடை. அவர் உன் வலிமையை ஊக்குவித்து, நல்ல புத்தி சக்தியையும் உற்சாகத்தையும் அளிப்பார்.

வீணான அச்சத்தை விலக்கு. ஆண்டவனுடைய பக்தர்களுக்கு, அவனுடைய குழந்தைகளுக்கு அச்சம் எங்கிருந்து வரும்? முழுமனதுடன் தியானமும் ஜபமும் செய். யம பயமும் ஓடிப் போகும். நீங்கள் ஒவ்வொருவரும் ஆன்மிக வாழ்க்கையில் உன்னத நிலை எய்தி, உலகிற்குச் சேவை புரியும் உத்தமர்களாக விளங்க வேண்டும் என்பது என் பிரார்த்தனை.

நீ என்ன அர்த்தமில்லாமல் பிதற்றுகிறாய்—என்னை ஸ்ரீகிருஷ்ணருக்கு ஒப்பிட்டு? அவருடைய பாததூளியின் தூளி நாங்கள். அந்த மாதிரியெல்லாம் இனி ஒருபோதும் எழுதாதே. மின்மினிப் பூச்சியை எப்படிச் சூரியனுடன் ஒப்பிட முடியும்?

சீ! எனக்கு அருவருப்பாக இருக்கிறது. நான் அவருடைய பக்தர்களின் வேலைக்காரனுக்கு வேலைக்காரனாக இருக்கவே விரும்புகிறேன். உனக்கு நல்ல புத்தியை ஸ்ரீராமகிருஷ்ணர் கொடுக்கட்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன். இப்போது நீ பேசுவது போலப் பேசினாலோ நினைத்தாலோ என்ன ஏற்படும் என்று உனக்குத் தெரியுமா? கட்சிப் பிரதிகட்சியும் மதவெறியும் தோன்றும். மதத்தின் பெயரால் ஏற்படும் பிளவுகளில் விழ்ந்து, அந்தக் கொள்கையைக் கைக்கொண்டவர்கள் நாசமடைவார்கள். சமுத்திரத்தில் ஆனந்தமாக விளையாடும் மீனைப் போல இரு; ஒரு குறுகிய குட்டையில் இருக்கும் மீனைப் போல இருக்காதே. உன் மனநிலை எல்லையற்றதாகவும் அளவு கடந்ததாகவும் பரவியிருக்கட்டும். சத்சங்கத்தை எப்போதும் நாடு. பகவந்நாமத்தைப் பஜனை செய். பற்றுகளை விடு. கவனமாக இரு. ஜாக்கிரதையாக இரு. முன்னேறிச் செல். வாழ்க்கையில் முன்னேறியபடியே சென்றுகொண்டிரு.

ஒருவனிடம் நீ ஒரு வேலையை ஒப்படைத்தால் அவனுக்கு அதன் பொறுப்பையும் கொடுத்தால்தான் அவன் சுயமாக அதைப்பற்றி சிந்திக்கத் தொடங்குவான்; அப்போது அவனுடைய அறிவு வளரும்; அவன் வெற்றியடைவான்; தன் பலத்தால், பிறர் கையை எதிர்பார்க்காமல் செயல் புரிவான்.

மனதை ஒருமுகப்படுத்தித் தியானமும் ஜபமும் பழகு. அதன் மூலம் மனதின் திரிசல் படிப்படியாகக் குறையும். இப்போது நீ தனிமையில் இருக்கிறாய். ஆன்ம சாதனங்களைத் திடசித்தத்துடனும் முழு மனதுடனும் பழகுவதற்கு இது நல்ல வாய்ப்பு. பூஜையிலும் தியானத்திலும் ஆர்வத்துடன் காலத்தைக் கழித்தால் பகவான் உன்னை லட்சியத்தை நோக்கி அழைத்துச் செல்வார்.

துன்பம் ஒரு சிறந்த ஆசான். துன்பமும் கஷ்டமும் அனுபவிக்காவிட்டால் ஒருவனுக்குப் பிறருடைய துன்பங்களுக்கு இரங்கும் மனப்பான்மை வராது.

[ஒரு துறவிக்கு] பொதுமக்களிடமிருந்து உதவியைப் பெறாவிட்டால் நீ எப்படி ஒரு சேவாசிரமத்தை நடத்தமுடியும்? நிச்சயமாக நீ பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கலாம். ஒருவருடைய உதவியையே நம்பியிருப்பது நல்லதல்ல.

பெயருக்கும் புகழுக்கும் உள்ள ஆசையை ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்துவிடு. சிறிதளவு பெயரும் புகழும் தாமாகவே ஒருவேளை உன்னை நாடி வந்தால் அவை உனக்குத் தீங்கு செய்ய மாட்டா. நமது பிரபுவின் பக்தர்கள் அனைவரும் ஜீவன் முக்தர்கள். ஆண்டவனுடைய வலிமை நம்முடைய வலிமை என்று நினைத்து வீரர்களைப் போல் நடந்து கொள்ளுங்கள். பலவீனம் எப்போதாவது தோன்றினால், தனிமையில் ஆண்டவனிடம் பிரார்த்தனை செய். அவர் உனக்கு வலிமையையும் தெளிவான புத்தியையும் கொடுத்து, அவரே உனக்கு வழிகாட்டி அழைத்துச் செல்வார்.

நீ எந்த வேலையைத் தொடங்கினாலும் முதலில் ஆண்டவனைப் போற்றி, அவனை நம்பி, அவனுடைய கருவியாகச் செயல்படு. நன்மை செய்வதெல்லாம் ஆண்டவனே என்பதை ஞாபகத்தில் இருத்திக்கொண்டு அவனைச் சார்ந்திருந்தால் ஒரு தீமையும் வராது. ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருவருளால் நீ எல்லாப் பணிகளையும் அவருடைய பூஜையாகவும் அவருடைய திருப்திக்காகவும் செய்ய அவர் அருள் புரியட்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். உன்னுடைய எந்தப் பணியிலும் வேறு எந்த நோக்கமும் இல்லாமலிருக்கட்டும்.

எல்லாம் இறைவனுடைய இச்சைப்படியே நடக்கும். ஆனால் ஒருவன் அந்த இச்சையை எப்படி அறிந்து கொள்வது? இறைவனை எப்போதும் மறக்காமலிருப்பதுதான் கடமை. நல்லதோ கெட்டதோ எல்லாம் அவனைச் சார்ந்தது. நாம் எல்லா நிலையிலும் போதுமென்ற மனதுடன் திருப்தியாக இருக்கவேண்டும். நாம் அவனுக்குச் சொந்தம். அவன் இச்சைப்படி நம்மை எப்படி வேண்டுமானாலும் நடத்தட்டும். ★

(292-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஞானேந்திரியங்களுக்குத் தலைமை இந்திரியமான மனம் வசப்படும். அப்போது சிவபரம்பொருளை அறிவதற்கு ஏதுவாகிய ஞானம் தோன்றும். சீவன் சிவனாக இருப்பது தெரியும். இதுவே 'சிவனே' என்று இருத்தல். பதமுத்திக்கு மேலான பதிமுத்தி.

ஊன் கெட்டு உயிர் கெட்டு உணர்வு கெட்டு உள்ளமும்போய்த் தான் கெட்ட நிலையே பரமான்மாவைத் தரிசிக்கும் நிலை. உரையும் மனமும் கடந்து தோன்றும் உயர்வு ஒப்பும் இல்லா அனுபவமே பிரம்மானுபவம். இதனை அனுபவித்தவர்களே அனுபூதிமான்கள். பார்க்கும் இடமெங்கும் ஒரு நீக்கமற்ற நிறைந்திருக்கும் பரிபூரணானந்தமாகிய பரம்பொருளைக் கண்டு அனுபவிப்பதே அத்துவித அனுபவம். உப்பு நீரில் வாழ்கிற மீன் உப்பேறாது இருத்தல் போல, உடம்பு இருந்தும் இல்லாதிருக்கும் நிலையே ஞானியர் நிலை. அகப்பற்றும் புறப்பற்றும் இல்லாது பரம்பொருளையே எங்கும் எப்போதும் காண்கிற பேரின்ப அனுபவமே ஞானமார்க்கத்தால் பெறுவது.

சகச் சார்பிலாச் சிவானுபூதியைச் சார்ந்தவர் பரமுத்தர். சகத்தையும் சிவத்தையும் சார்ந்தவர் சீவன்முத்தர். சகத்தையே சார்ந்திருப்பவர் பெத்தர். இவர்களுக்கு உவமைகூறின் முறையே, பரமுத்தர் இரவில் வெளிச் செல்லாத புறப் போன்றவர். ஜீவன் முத்தர் இரவிலும் பகலிலும் வெளிச்செல்லும் பூனை போன்றவர். பெத்தர் இரவில் மட்டும் வெளியில் செல்லும் ஆந்தை போன்றவர்.

பெத்த நிலையில் ஆன்மாவில் சிவன் தோன்றாது விளங்கும். முத்தி நிலையில் சிவனிடத்து ஆன்மா தோன்றாது விளங்கும். இதனைத் தாயுமான சுவாமிகள்,

''எனக்குள் நீ என்றும் இயற்கையாய்ப் பின்னும்
உனக்குள் நானென்ற உறுதிகொள்வ தெந்நாளோ?''

என்றார்.

இறைவனே திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் குருமூர்த்தமாக எழுந்தருளி மணிவாசகப் பெருந்தகையாருக்குச் சிவஞானத்தைத் தெளிய உரைத்தார். அதனால் மணிவாசகரும் ஞான நெறியில் நின்று பரமுக்தி பெற்றார். இந்த ஞான நெறியில் நின்று அடைவதுதான் சாயுச்சிய பதம் ஆகும். ★



கருணைக்கு வெகுமதி

எஸ். கோபால்

அயோத்தி மன்னன் திலீபன் மகதநாட்டு இளவரசியை மணந்து மனுநீதி தவருமல் அரசு செலுத்தி வந்தான். பல ஆண்டுகள் ஆகியும் அவர்களுக்கு மகப்பேறு இல்லாமலே இருந்தது. ஆகவே அரசனும் அரசியும், தானம் விரதம் பூஜை யாத்திரை ஆகியவற்றை மேற்கொண்டனர். எனினும் எதுவும் பயன்தராது போகவே அவர்கள் இருவரும் பெரிதும் கவலை கொண்டனர்.

வசிஷ்டர் திலீபனின் குலகுருவாக இருந்தார். ஒரு சமயம் அவர் அரசதம்பதியரைத் தமது ஆசிரமத்துக்கு அழைத்து உபசரித்தார். அவரிடம் அவர்கள் தங்கள் குறையைத் தெரிவித்தனர். வசிஷ்டர் தீர்க்க தரிசியாதலால் காரணத்தை ஞானதிருஷ்டியால் கண்டறிந்தார்.

''திலிபா, நீ ஒரு சமயம் தேவலோகம் சென்றிருந்தாய். அப்போது கற்பகவிருட்சத்தின் கீழ் நின்றிருந்த காமதேனுவை அலட்சியம் செய்தாய். தெய்வ பசுவைத் தொழுது ஆசிபெற மறந்த காரணத்தினுல் கோபம்கொண்ட காமதேனு உன்னை சபித்துவிட்டது. அது காரணமாகவே உனக்கு புத்திர பாக்கியம் இல்லாமல் இருந்து வருகிறது. காமதேனுவின் மனம் குளிரும்படி நீ ஏதேனும் செய்தால் சாபம் நீங்கி உனக்குக் குழந்தைச் செல்வம் உண்டாகும்'' என்று வசிஷ்டர் கூறினுர்.

அரசன் ஆவலுடன், ''சுவாமி! என்ன செய்தால் காமதேனுவின் கோபம் தணியும் என்று சொல்லுங்கள். அவ்விதமே செய்கிறேன்'' என்ருன்.

''காமதேனுவுக்கு நந்தினி என்று ஒரு கன்று இருக்கிறது. அது என் ஆசிரமத்தில்தான் இருக்கிறது. அது இப்போது நதிக்கரையில் புல்மேய்ந்து கொண்டிருக்கும்; நந்தினிக்குத் தக்க உணவு உறைவிடம் தந்து போஷித்து, தீங்கு நேராமல் பாதுகாத்தால் தாய்ப் பசுவாகிய காமதேனுவின் உள்ளம் குளிரும்; உன் சாபமும் நீங்கும்'' என்று வசிஷ்டர் கூறினுர்.

உடனே திலிபன் கன்றைத் தேடிப் புறப்பட்டான். பாதுகாப்புக்காக வில்லையும் அம்புகளையும் உடன் எடுத்துச் சென்ருன்.

நதியோரம் புல் மேய்ந்து கொண்டிருந்த நந்தினியைக் கண்ட திலிபன் ஆவலுடன் அதை நெருங்கினுன். நந்தினியைத் தன் அரண்மனைக்கு அழைத்து வர அவன் மனப்பூர்வமாக விரும்பினுன். ஆனுல் அவனைக் கண்டதுமே கன்று ஓடத் துவங்கியது. திலிபனும் நந்தினியைத் தொடர்ந்து சென்ருன். கன்று நிற்பதும் புல்லைக் கடிப்பதும் ஓடுவதுமாகவே இருந்தது. திலிபன் சளைக்காமல் நந்தினியை பின்பற்றி ஓடினுன்.

கன்று இமயமலைச் சாரலை அடைந்து ஒரு மரத்தடியில் நின்று இளைப்பாறியது. அப்போது அதைப் பிடித்துவிடக் கூடிய வாய்ப்பு இருந்ததை திலிபன் உணர்ந்தான். ஆனுல் சற்றும் எதிர்பாராத வகையில் திடீரென்று புதருக்குள்ளிருந்து ஒரு சிங்கம் வெளிப்பட்டுக் கன்றின் மீது பாயத் தயாராயிற்று. அதிர்ச்சியும் பயமும் அடைந்த திலீபன் வில்லில் அம்பைப் பொருத்திச் சிங்கத்தை வீழ்த்த முயன்ருன்.

அதே சமயம் வியப்புக்கு உரிய ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. சிங்கம் தனது வடிவம் நீங்கி ஓர் அசுரனுக மாறியது. அட்டகாசமாகச் சிரித்த பிறகு அசுரன் பேச ஆரம்பித்தான்.

''ஏய்! திலீபா! என்னை யார் என்று நினைத்தாய்? சிவபிரானின் அஷ்டமூர்த்திகளில் ஒருவன் நான். என் பெயர் கும்பாசூரன்'' என்று அவன் உரக்கக் கத்தினுன்.

''உனக்கு இங்கு என்ன வேலை?'' என்று திலீபனும் கோபத்துடன் கேட்டான்.''

''அப்படிக் கேள்! இந்த மரம் பார்வதி தேவிக்கு மிகவும் பிரியமானது. இதன்மீது அவர் காட்டுகின்ற பிரியம் குமரன் ஸ்கந்தனிடம் காட்டும் பிரியத்தைவிடவும் மிகுதியானது. இந்த மரத்தைப் பாதுகாத்து வரும்படி எனக்கு அவர் கட்டளையிட்டிருக்

கிருர் இந்த மரத்தில் முதுகை தேய்த்துப் பட்டையை உதிர்க்கும் மிருகம் எதுவானாலும் அதனைக் கொன்று தின்பது என் வழக்கம். மரத்து நிழலில் நிற்பது, படுப்பது, புல் மேய்வது போன்ற எந்தச் செயலையும் நான் அனுமதிப்பதில்லை. அதற்கான தண்டனை எனக்கு விலங்குகள் இரையாவதுதான். இந்தக் கன்று செய்த குற்றத்திற்காக அதை இப்போது நான் கொல்லப்போகிறேன்'' என்று கர்ஜித்தான் கும்பாசுரன்.

'' கன்றைக் காப்பது என் கடமை. அது வசிஷ்ட மகரிஷியின் ஆணையுங்கூட!'' என்று கூறினான் திலீபன்.

''கன்றைக் கொல்வது என் உரிமை. அது பார்வதி பரமேசுவரரின் கட்டளையுங்கூட!'' என்ருன் அசுரன்.

''உன்னுடன் போரிட்டு என் நோக்கத்தை நிறைவேற்றுவேன்'' என்று திலீபன் வீரத்துடன் கூறினான்.

''என்னுடன் போரிடுவதா?'' என்று ஏளனமாகச் சிரித்தான் அசுரன்; ''நான் பராக்கிரமும் சித்திகளும் பெற்ற அசுரன். நீயோ சாதாரண நரன். என்னோடு போரிடுவதால் நீ மட்டுமல்ல, கன்றும் உயிரிழக்க நேரிடும். கன்றைக் காக்கும் எண்ணத்தைக் கைவிட்டு உயிர்பிழைத்துப்போ!''

திலீபன் மனம் சோர்ந்தான். அசுரனுக்குப் பணிந்து போவதைத் தவிர வேறு வழி எதுவும் அவனுக்குப் புலப்படவில்லை. ''கன்றைக் காப்பாற்ற வேண்டுமானால் நான் என்ன செய்ய வேண்டும்? சொல், செய்கிறேன்'' என்று கேட்டான்.

''நீயாக வலிந்து எனக்கு இரையாக வேண்டும்'' என்ருன் அசுரன்.

பச்சிளங் கன்று அசுரனுக்குப் பலியாவதை நினைக்கவே திலீபனின் நெஞ்சம் கலங்கியது. அதன் உயிரை மீட்க அவன் உறுதி பூண்டான். தன்னைப் பலி கொடுக்கவும் அவன் அஞ்சவில்லை. ஆயுதங்களைக் கீழே போட்டு அசுரனுக்கு இரையாகத் தயாரானான்.

அப்போது ஆகாயத்தில் கண்ணைப் பறிக்கும் பெருஞ்சோதி தோன்றியது. அதன் மத்தியில் தேவி பிரசன்னமானாள். திலீபன் தேவியைக் கரம் குவித்து வணங்கி நின்ருன்.

''திலீபனே! நான்தான் காமதேனு. லட்சுமி என்றும் என்னை அழைப்பார்கள். எவரது நெஞ்சம் உயிர்களுக்காக இரங்குகிறதோ அவர்மீது என் அருட்பார்வை படுகிறது. உள்ளத்தில் சுரக்கும் கருணையின் மறு பெயர்தான் காமதேனு. கன்றைக் காப்பாற்றும்பொருட்டு உயிரை நீ துச்சம் என்று கருதினாய். உன் கருணைக்கு உவந்தேன். என் மனம் குளிர்ந்தது. உனக்குச் சத்துவகுணம் நிரம்பிய ஆண்மகன் பிறப்பான். உன் நாடு நலம் பெறும்'' என்று வரம் தந்து தேவி மறைந்தாள்.

திலீபன் மரத்தினடியில் பார்த்தான். அங்கு அசுரனும் நந்தினியும் காணப்படவில்லை. ஃ



பரம ஏழையான குசேலர் கொடுத்த அவலைக் கிருஷ்ண பகவான் ஆர்வத்துடன் வாங்கிச் சாப்பிட்டார். சபரி ருசி பார்த்துக் கொடுத்த பழத்தை ஸ்ரீராமன் அங்கீகரித்து அவளுக்கு மோட்சம் அளித்தார். தமக்கு அளிக்கப்படும் சாதனம் உயர்ந்ததா, தாழ்ந்ததா என்பதைப் பற்றிப் பகவான் கவலைப்படுவதில்லை. அவருக்கு எந்தச் சாதனமும் தேவையும் இல்லை. மனப் பூர்வமான பக்தியுடன் மானசிகமாக அர்ப்பணம் செய்யப்படுவதைக்கூட அவர் ஏற்றுக்கொள்கிருர். களங்கமற்ற பக்தியுடன் ஒரு துளசிதளத்தைக் கொடுத்தால்கூட பகவானைத் திருப்தி செய்யலாம். திரௌபதி பகவானுக்கு ஒரு சிறிய பச்சிலையைக் கொடுத்துத் திருப்தி செய்த சம்பவம் மகாபாரதத்தில் இருக்கிறது. எனவே, மற்ற எல்லா யக்ஞங்களையும்விடப் பக்தி யக்ஞமே சிறந்தது.

—திலகர்



இந்துக்களுக்குத் திருமால் போன்று ரோமருக்கு ஜூபிடர் காக்கும் தெய்வம்

'வால்மீகி'

புராணங்கள், இதிகாசங்கள் என்பவை இந்து சமயத்துக்கு மாத்திரம் பிரத்தியேகமானவையல்ல, உலகிலுள்ள பல்வேறு நாடுகளிலும் பழங் காலத்திலே வெவ்வேறு மாதிரியான புராண இதி காசங்கள் வழக்கில் இருந்து வந்திருக்கின்றன. அவற்றின் அறிகுறிகளாக இன்று பல நாடுகளில் கல்வெட்டுகளையும், சிதைந்து போன சிற்பங்களை யும் நாம் காண்கிறோம்.

கிறிஸ்தவமும் இஸ்லாமும் பௌத்தமும் பல நாடு களிலும் பரவியதன் பயனாக அந்த நாடுகளில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த பழைய சமயங்கள் மறைந்துவிட்டன. என்றாலும் அவற்றை விடாப் பிடியாகப் பின்பற்றி வரும் பழங்குடி மக்கள் அங்கே சிலரும், இங்கே சிலருமாக இன்னும் தென்படவே செய்கிறார்கள்.

இந்துக்களைப் போலவே மற்ற நாட்டு மக்களும் தங்கள் தங்களது நாட்டுப் புராண இதிகாசங்களில் அபரிமிதமான நம்பிக்கை வைத்துக்கொண்டு வாழ்ந்த காலம் உண்டு.

இந்துக்களின் புராண இதிகாசங்கள் இன்றைக்கும் உயிருள்ளவையாகவும் மக்களின் நம்பிக்கைக்கும் பக்திக்கும் பாத்திரமானவையாகவும் தொடர்ந்து இருந்து வருகின்றன. கிறிஸ்தவ இஸ்லாமிய பௌத்த சமயத் தாக்குதல்களினாலும் கோடானு கோடி இந்துக்களின் சமய நம்பிக்கையை அழிக்க முடியவில்லை. இந்து சமயத்துக்கு ஆபத்து நேரிட்ட ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு பெரியவர் தோன்றிச் சமயத்தைக் கட்டிக்காத்து வந்திருக் கிறார்கள்.

பிற நாடுகளிலோ இவ்விதம் நிகழாமல் புராதன சமயங்கள் மாய்ந்து மடிந்துபோயிருக்கின்றன. பழையன கழிந்து புதியன தோன்றியிருக்கின்றன. என்றாலும் மனிதன் இந்த மண்ணுலகில் தோன்றிய காலம் முதற்கொண்டு அவனுக்கு ஏதாவது ஒரு வகையான சமய நம்பிக்கை இருந்திருக்கிறது என்பதை நாம் தெளிவாக அறியக்கூடியதாக இருக்கிறது. சிலநாட்டுப் பழங்குடி மக்களின் சமய நம்பிக்கைகளை இங்கே கவனிப்போம்.

உரோமாபுரி

புராதன உரோம ராஜ்யத்தில் முழுமுதற் கடவுள் ஜூபிடர் (Jupiter) என்பவர். வெளிச்சத்துக்கும் மழைக்கும், மின்னலுக்கும் இடிக்கும் இவரே அதிதேவதை. இத்தாலி முழுவதிலும் உயரமான மலைச்சிகரங்களில் இவருக்குக் கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்து சமயத் திருமாலைப் போல உரோமானியர் களுக்கு ஜூபிடர் காக்கும் கடவுள். ஜூனோ (Juno) என்பவள் இவருடைய தங்கை. அவளே ஜூபிடரின் மனைவியுமாவாள். முக்கியமாக, பெண் களின் க்ஷேமத்தைக் கவனிக்கும் தெய்வம் ஜூனோ- செப்டம்பர் மாதம் 13ஆம் தேதி ஜூபிடருக்கும், மார்ச் மாதம் முதல் தேதி ஜூனோவிற்கும் திருவிழா கொண்டாடுவது உரோமானியப் பழங்குடி மக்களின் வழக்கம். மாங்கல்யத்தைப் பாதுகாக்கும் தெய்வ மாக ஜூனோவைப் பெண்கள் வழிபட்டனர். எனவே குடும்ப வாழ்க்கைச் சிறக்க பூரண தினத்தன்று பெண்கள் ஜூனோவைத் தவறாமல் வழிபட்டு வந்தார்கள். ஜூபிடருக்கு மலைச் சிகரங்களில் கோயில்களைச் சமைத்ததைப் போலவே பூஞ்சோலைகளில் ஜூனோவுக்குக் கோயில்கள் கட்டப்பட்டிருந்தன.

ஜெனஸ் (Janus) என்ற இன்னொரு தெய்வத் தையும் உரோமானியர் வழிபட்டார்கள். இந்தக் கடவுளுக்கு வெவ்வேறு திசைகளைப் பார்க்கும் இரண்டு தலைகள் உண்டு. சகலத்துக்கும் இவரே சிருஷ்டிகர்த்தா. இந்து சமயத்திலுள்ள பிரம் மாவைப் போல, ஜூனோஸின் வேலை சிருஷ்டித் தொழிலை நடத்துவது. எல்லாவற்றுக்கும் இவரே ஆரம்பமாகையினால், ஒவ்வொரு நாளிலும் முதல் மாலையிலும், ஒவ்வொரு மாதமும் முதல் தேதியிலும், ஒவ்வொரு வருஷமும் முதல் மாதத்திலும் இவருக்கு விசேஷப் பூஜைகள் நடத்துவது பழங்கால

உரோமானியரின் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

உரோமானியர் நம்பிய முழுமுதற் கடவுளான ஜூபிடருக்கு அடுத்த இரண்டாவது ஸ்தானம் மார்ஸ் (Mars) என்ற கடவுளுக்குத்தான். யுத்தங்களின் அதிதேவையான மார்ஸுக்கு வசந்தகாலத்தில் இத்தாலி முழுவதிலும் திருவிழாக்கள் நடத்துவார்கள். இவருக்கு உரிய கோவிலில் இந்தக் கடவுளின் புனிதச் சின்னங்களாக ஈட்டியும் கேடயமும் வைக்கப்பட்டிருக்கும்.

ஆரோக்கியத்தின் அதிதேவதைக்குப் பெயர் வெஸ்டா (Vesta). இது ஒரு பெண் தெய்வம். ஆதி காலத்தில் உரோமானியரின் இல்லந்தோறும் அக்கினியை அணையாமல் வைத்திருப்பது சமயக் கடமையாக இருந்தது. தனியார் இல்லங்கள் இந்தக் கடமையிலிருந்து தவறினுல்கூட, அரண்மனையில் எப்போதும் அணையாமல் அக்கினியைப் பாதுகாக்க வேண்டும். இந்த வேலையைக் கவனிப்பதற்காக அரண்மனையில் சில கன்னிப் பெண்கள் நியமிக்கப் பட்டிருப்பார்கள். அவர்களை 'வெஸ்டல் வர்ஜின்' என்று அழைப்பார்கள். எக்காரணத்தை முன்னிட்டும் புனிதமாகக் கருதப்படும் இந்த நெருப்பு அணையக் கூடாது. இந்து சமயத்திலும் சில வைதிகக் குடும்பங்களில் ஹோமம் செய்யும் அக்கினி இப்படி அணையாமல் பாதுகாக்கப்பெற்று வருவது குறிப்பிடத் தகுந்தது.

உரோமானியர்களின் அக்கினி தேவனுக்குப் பெயர் வல்கன் (Vulcan). எரிமலைகள், தானியத்தைச் சேமித்து வைத்திருக்கும் இடங்கள், துறைமுகங்கள், இன்னும் எங்கெல்லாம் தீப்பிடிக்கும் சாத்தியக் கூறுகள் உண்டோ அங்கெல்லாம் தீப் பிடிக்காமலிருக்க வேண்டும் என்பதற்காக இந்த வல்கன் கடவுளுக்குச் சிறிய கோயில் கட்டி வழிபடுவார்கள்.

விவசாயத்தின் அதிதேவதை சனி (Saturn). இந்தக் கடவுளுக்கு டிசம்பர் மாதம் மாரிக் காலத்தில் ஏழு நாள் திருவிழா நடக்கும். முதலில் கிராமங்களில் மட்டும் நடந்து வந்த இந்தத் திருவிழா காலக்கிரமத்தில் நகரப்புறங்களிலும் உற்சாகத்தோடு கொண்டாடப் பெற்றது.

இவர்களைத் தவிர, வர்த்தகத்தின் அதிதேவதை மர்க்குரி (Mercury), சிறு குடிசைத் தொழில்களின் அதிதேவதை மினர்வா (Minerva), விதை விதைத்தலின் அதிதேவதை கான்ஸஸ், மரணத்தின் அதி தேவதை லூர்கஸ், மையத்தின் அதிதேவதை லிபிடிஞ என்று பல சில்லறைத் தெய்வங்களும் பழங்கால உரோமானியரிடம் உண்டு.

பிரம்மா விஷ்ணு சிவன் என்ற மும்மூர்த்திகளையும் முக்கியத் தெய்வங்களாகக் கொண்ட இந்து சமயத்தில் எப்படி முருகன், விநாயகர், மாரியம்மன், கண்ணன், ராமன், கோபாலன் என்று பல கடவுளரும், நவக்கிரகங்களுக்கு ஒன்பது அதி தேவதைகளும், இவர்களைத் தவிர அக்கினி, வருணன், வாயு, இந்திரன், குபேரன் என்று பல தேவர்களும் உண்டோ, அதேபோல உரோமானியர்களின் புராதன சமயத்திலும் ஜூபிடர் என்ற முழுமுதற் கடவுளுடன் வேறு பல தெய்வங்களின் வழிபாடும் வழக்கில் இருந்து வந்தது.

ஆயர்பாடிக் கண்ணனும் ரோமரின் ரோமுலஸும்

அரும் பெரும் செயல்களைச் செய்த சில பெரியோர்களுக்கு இந்தியப் புராண இதிகாசங்களில் தெய்வாம்சம் கற்பிக்கப்பட்டு வழிபாடுகளும் நடந்து வருவதைப் போலப் புராதன இத்தாலியில் தெய்வங்களாக்கப்பட்ட மனிதர்களும் சிலர் இருக்கவே செய்கிறுர்கள். அவர்களில் ரோமுலஸ் (Romulus) என்பவர் முக்கியமானவர். இவரே உரோமாபுரியை நிர்மாணித்தவர் ஆவார். இந்த ரோமுலஸின் கதை அசல் இந்தியப் புராணக் கதையைப் போலவே இருக்கிறது.

புராதன இத்தாலியை நூமிட்டர் என்ற மன்னன் அரசாண்டு வந்தபோது, அவனை அவனுடைய தம்பி அமுலியஸ் என்பவன் சிறையில் தள்ளிவிட்டு அரசைக் கைப்பற்றினுன். பாகவதத்தில் எப்படிக் கம்ஸன் தன் தகப்பன் உக்கிரசேனரைச் சிறையில் தள்ளிவிட்டு அரசைக் கைப்பற்றினுனே, அதே போல அண்ணன் நூமிட்டரைச் சிறையிலடைத்து விட்டுத் தம்பி அமுலியஸ் அரசனுனுன். கம்ஸனுக்குத் தேவகி என்ற ஒரு தங்கை இருந்தாள். அதுபோல, நூமிட்டருக்கும் ரீயாஸில்வியா என்ற தங்கை இருந்தாள். தன் தங்கை தேவகியை வசுதேவருக்கு மணம் முடித்து வைத்த கம்ஸன் புதுமணத் தம்பதிகளைத் தன் தேரில் ஏற்றி நகர் வலம் வந்தபொழுது, "முட்டாளே! எந்தத் தங்கையின் திருமணத்தை நீ உற்சாகமாகக் கொண்டாடுகிருயோ அதே தங்கையின் வயிற்றில் பிறக்கும் எட்டாவது குழந்தை உன் உயிரைக் குடிக்கும்" என்று அசரீரி கூறியது. இதைக் கேட்டு ஆத்திர

மடைந்த கம்ஸன் தங்கையையும், அவள் கணவர் வசுதேவரையும் சிறையிலடைத்தான்.

அதேபோல, அமுலியஸ் அரசனுனதும், ''அவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளை உன்னை அழிக்கப் போகிறுன்'' என்று அசரீரி அமுலியஸை எச்சரித்தது. உடனே அமுலியஸ் தன் தங்கை ரியாஸில்வியாவைப் புனித அக்கினியைக் காக்கும் 'வெஸ்டல் வர்ஜினை' அதாவது பரிசுத்தக் கன்னியாக்கி ஆண் வாசனையே இல்லாத பாதுகாப்பான இடத்தில் காவல் வைத்தான். என்ருலும் விதியை யாரால் வெல்ல முடியும்? தேவகிக்குச் சிறைச்சாலையில் கண்ணன் பிறந்ததைப் போல, மார்ஸ் என்ற உரோமானியரின் இரண்டாவது பெருங்கடவுள் காவலில் இருந்த ரியாஸில்வியாவின் கருவில் உற்பவித்து, இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. அந்த இரண்டும் ஆண் குழந்தைகள். ஒரு குழந்தைக்கு ரோமுலஸ் என்றும், மற்ருெரு குழந்தைக்கு ரோமுஸ் என்றும் பெயர் வைத்தாள் கன்னிப்பெண் ரியா.

விஷயம் அரண்மனைக்கு எட்டியது. மன்னன் அமுலியஸ் உருவிய வாளுடன் ஓடி வந்தான். இரண்டு குழந்தைகளையும் துண்டுதுண்டாக வெட்டிவிட அவன் துடித்தான். தங்கை ரியாவின் அழுகை அவன் மனதைக் குழப்பியது. ஆகவே அவள் முன்னிலையில் மன்னன் குழந்தைகளைக் கொல்ல விரும்பாமல் காவலர்களிடம் குழந்தைகளைக் கொடுத்து, ஆற்றில் போட்டுவிடும்படி உத்திரவிட்டான். அந்தக் காவலர்களுக்கு குழந்தைகளைக் கொல்ல மனம் வரவில்லை. ஒரு தெப்பத்திலே இரண்டு குழந்தைகளையும் படுக்கவைத்துப் பெரு வெள்ளத்தில் டைபர் நதியிலே விட்டுவிட்டார்கள்.

குழந்தைகள் வெகு தூரம் வரையில் தெப்பத்தில் மிதந்து சென்று, கடைசியாக ஓர் இடத்தில் கரையில் ஒதுங்கின. அந்தப் பக்கமாக வந்த ஓநாய் குழந்தைகளைத் தெப்பத்திலிருந்து கரைசேர்த்துப் பால் கொடுத்தது. ஓர் இடையன் அந்தப் பக்கமாக வரவே குழந்தைகளை விட்டு ஓநாய் ஓடிவிட்டது. குழந்தைகளைக் கொன்று தின்னுமல் அவற்றுக்கு ஓநாய் பால் கொடுத்த அதிசயத்தைக் கண்ட இடையனுக்கு ஏதோ தெய்வசங்கற்பத்தினுல்தான் குழந்தைகள் அங்கு வந்திருக்க வேண்டும் என்று தோன்றியது. அவன் இரண்டு குழந்தைகளையும் ஆசையோடு வாரியணைத்து வீட்டுக்குக் கொண்டு போனுன். இப்படி ரோமுலஸும் ரோமுஸும் அரசனுடைய தங்கை பிள்ளைகளாகச் சிறையில் பிறந்து, மரணத்தின் வாயிலிருந்து தெய்வாதீனமாகத் தப்பி இடைச்சேரியிலே வளர்ந்து வரலானுர்கள்.

கண்ணன் ஒருத்திக்குப் பிள்ளையாகப் பிறந்து இன்னொருத்தியால் வளர்க்கப்பட்டது போல, ரோமுலஸும் ரோமுஸும் ஒருத்திக்குப் பிறந்து மற்ருெருத்தியால் வளர்க்கப்பட்டனர்.

கம்ஸனுடைய சிறையிலே தேவகிக்குப் பிறந்த கண்ணன், பெருக்கெடுத்து ஓடிய யமுனுநதிக்கு அப்பால் கோகுலம் என்ற இடைச்சேரியிலே கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டு, இடையர்களுடன் கண்ணனும் பலராமனும் வளர்ந்த மாதிரி ரோமுலஸும் ரோமுஸும் இடைச்சேரியிலே ஓடியாடி விளையாடி வளர்ந்து கொண்டிருந்தார்கள். காலக் கிரமத்தில் கண்ணன் கம்ஸனைக் கொன்று, சிறையிலிருந்து அவன் தந்தை உக்கிரசேனரைத் திரும்ப அரசு கட்டிலில் ஏற்றிய மாதிரி, ரோமுலஸ் இளைஞர்களடங்கிய படையுடன் படையெடுத்துச் சென்று அமுலியஸைக் கொன்று, சிறையிலிருந்த அவர் அண்ணன் நூமிட்டரைத் திரும்ப அரசனுக்கினுன்.

கண்ணனும் பலராமனும் மதுரையில் உக்கிரசேனனை மன்னனுக்கியதும் தங்களுக்கென்று துவாரகைப் பட்டிணத்தைப் புதிதாக நிர்மாணித்துக் கொண்டு அங்கே அரசு செலுத்தினுர்கள். இது போலவே ரோமுலஸும் ரோமுஸும் குழந்தைகளாகத் தாங்கள் வளர்ந்த இடைச்சேரியில் புதிய பெரிய பட்டிணத்தை நிர்மாணித்து அதற்கு உரோமாபுரி என்று பெயரிட்டார்கள்.

ரோமுலஸின் பிறப்பில் கண்ணனைப் போல எப்படி ஒரு தெய்வாம்சம் தென்படுகிறதோ, அதே போல அவனுடைய முடிவும் கிட்டத்தட்டக் கண்ணனின் முடிவைப் போல இருப்பது குறிப்பிடத்தக்கது. கண்ணனின் கால்விரலைப் பார்த்து மான் என்று நினைத்த ஒரு வேடன் அம்பு எய்ய, அதை ஒரு காரணமாக வைத்துக் கண்ணன் உயிர் நீத்தான். வைகுண்டத்திலிருந்து வந்த தேஜோமயமான விமானத்தில் ஏறி அவன் வைகுண்டம் சென்றதாகவும், அதை அறிந்து வந்து சொன்னவன் தாருகன் என்ற கண்ணனின் சாரதி ஒருவனே என்றும் பாகவதம் கூறுகிறது.


கிட்டத்தட்ட இதே போலத்தான் ரோமுலஸும் இந்த உலகை விட்டுச் சென்றதாக உரோமானிய புராணம் கூறுகிறது. ஒரு நாள் ரோமுலஸ் ஸெனட் சபையைக் கூட்டிப் பேசிக் கொண்டிருக்கும்போது, கண்குருடாகுமளவிற்கு ஒரு மின்னல் மின்னியது.

அதைத் தொடர்ந்து செவிடுபடும்படி இடி இடித்தது. ஸெனட்டர்களுக்குச் சுயநினைவும் கண்பார்வையும் திரும்பியபோது தங்களுக்கு முன்னால் மேடையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த ரோமுலஸைக் காணவில்லை. ரோமுலஸ் திடீரென்று மறைந்து விட்டான்.

சில மணி நேரம் கழித்து ஒரு முதியவர் அங்கு வந்து "ரோமுலஸ் தெய்வமாகிவிட்டான். தேஜோமயமானதொரு விமானத்தில் ஏறி அவன் வானில் பறந்து போவதை நான் கண்டேன். என் மூலம் அவன் ஒரு செய்தியையும் அனுப்பியிருக்கிறான். தன் தந்தை மார்ஸின் அழைப்பின் பேரில் அவன் சொர்க்கத்துக்குப் போகிறானும். குவிரினுஸ் என்ற பெயரில் தன்னை வழிபடுபவர்களுக்கு எப்பொழுதும் அருள் புரிவேன் என்று அவன் சொல்லச் சொன்னான்" என்று கூறினார்.

கண்ணன் சொர்க்கத்துக்குத் திரும்பியதை அவனது சாரதியான தாருகன் மாத்திரமே கண்டு சொன்னதைப் போல, ரோமுலஸ் சொர்க்கத்துக்குப் போனதை ஒரு முதியவர் மட்டுமே பார்த்து மற்றவர்களுக்குச் சொன்னார். அன்று முதல் உரோமானியர் ரோமுலஸுக்கு இத்தாலியின் பல பாகங்களிலும் கோவில்கள் கட்டி குவிரினுஸ் என்ற பெயரில் அவனை வழிபட்டு வரலானார்கள்.

சூரியனைச் சுற்றியுள்ள கிரகங்களிலே மிகப் பெரிய கிரகம் ஜூபிடர் என்ற கிரகம்தான். அந்தக் கிரகத்தைக் குரு என்றும், பிருகஸ்பதி என்றும், தேவர்களின் குரு என்றும் இந்துக்கள் கருதி வழிபடுகின்றனர். உரோமானியரோ மிகவும் பெரிய இந்தக் கிரகத்தை முழுமுதற் கடவுளாகவும், பூமிக்கு அருகிலுள்ள மார்ஸ் அதாவது செவ்வாய் கிரகத்தை இரண்டாவது முக்கிய கடவுளாகவும் கருதி வந்திருக்கின்றனர். ☆



புண்ணியவசத்தால் அழகிய வாக்கைப் பெற்றும், அதைக் கொண்டு எந்த மனிதர்கள், மக்களில் கீழ்த்தரமாக உள்ளவர்களைத் துதிக்கின்றனரோ, அவர்கள் காமதேனுவைப் பெற்றும், அதைக் கலப்பையில் கட்டி உழுவதற்கு உபயோகிக்கிறவர்களே ஆவர்.


—நீலகண்ட தீட்சிதர் அருளிய 'கலிவிடம்பணம்'

குடம் உண்டாவதற்கு முன்பும் பின்பும் ஆகாயம் இருக்கிறது என்ற அறிவு இருந்தபோதிலும், குடம் உண்டாகும்போது இந்த ஆகாயம் உண்டாகிறது. அது நாசமடைந்தால் இதுவும் நாசமடைகிறது என்று மனிதர்களுக்குப் பொய்யான தோற்றம் ஏற்படுகிறது. அவ்விதமே ஆத்மசொரூபம் உடலுக்கு முன்பும் பின்பும் இருந்தபோதிலும் உடலுடனே பிறப்பதாகவும் இறப்பதாகவும் தோன்றுகிறது.

—லகுசதச்லோகி

அலைகளில் ஜலமும், ஜலத்தில் அலைகளும் இருக்கின்றன. எனினும், எல்லாமே ஜலத்தைத் தவிர வேறல்ல. அது போலவே எல்லா வஸ்துக்களிலும் ஒரே ஆத்மாவும், ஒரே ஆத்மசொருபத்தில் எல்லா வஸ்துக்களும் இருக்கின்றன. ஆதலால், அறிவுள்ளவன், 'இரண்டாவதற்ற பிரம்மசொரூபம் ஒன்றே ஒன்றுதான் உண்மையாக உள்ளது; அதுவேதான் ஆத்மா' என்று உணர வேண்டும். எவன் பிரம்மசொருபத்தைப் பல விதமாக உள்ளதாக அறிகிறானே அவன் அடிக்கடி பிறந்து, இறத்தல் என்ற சம்சாரத்தையே அடைகிறான்.

—லகுசதச்லோகி



கழுத்தில் உள்ள நஞ்சு

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்

சிவபெருமானுடைய திருமேனி செக்கச் செவே லென்றிருக்கும். "சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான்" என்று திருநாவுக் கரசர் பாடுகிருர். அவர் அணிந்திருக்கும் பொருள் கள் வேறு வேறு நிறமாக இருக்கும். சிவந்த மேனி யாகிய நிலைக்களத்தில் அவை எடுப்பாகத் தெரியும். அவருடைய திருமார்பில் நாகப்பாம்பை அணிந்திருக்கிருர். அது தலைப்பக்கம் கரிய நிற முடையதாகத் தோன்றுகிறது. சிவப்பான திரு மேனியிலே அது புரளுவதை எளிதில் இனம் கண்டு கொள்ளலாம். அது படம் எடுத்து ஆடும். ஆகவே அதைக் காரைக்காலம்மையார் "பைத்து ஆடும்... பாம்பு" என்று சொல்கிருர்.

இறைவனுடைய திருக்கழுத்தில் கருநிறம் இருக் கிறது. அது நீலகண்டம் அல்லவா? காரைக்கால் அம்மையார் அடிக்கடி அந்த நீலகண்டத்தைப் பற்றிச் சொல்லுவார். அந்தக் கண்டம் கறுக்கா விட்டால் ஆலகால நஞ்சினுல் தேவர்கள் இறந்து போயிருப்பார்கள். அவர் மனைவிமார் கழுத்தில் மங்கல அணி இல்லாமல் போயிருக்கும்.

சிவபெருமானுக்கு நஞ்சைக் கண்டாலும் அச்சம் இல்லை; நஞ்சை உடைய பாம்பைக் கண்டாலும் அச்சம் இல்லை. அவர் அமிர்தமயமானவர். "கண்ணா ரமுதக் கடலே போற்றி" என்று மணி வாசகர் பாடுவார். மரணத்தை உண்டாக்கும் காலனே சிவபெருமானுல் மரணம் அடைந்தான் என்ருல் இந்த விஷமெல்லாம் அவருக்கு எந்த மூலை?

விஷம் அவருடைய திருக்கழுத்தில் நீல மணியைக் கட்டியது போல ஒளிர்கிறது. திரு மார்பிலே உள்ள பாம்பும் நீல நிறமுள்ள கழுத்தை உடையதாக இருக்கிறது. உடம்பெல்லாம் வெளிர் நீலம்; கழுத்துப் பக்கம் கருநீலம். நாம் அஞ்சும் பகையாகத் தோன்றும் பாம்பு, பெருமானுக்கு நகையாக இருக்கிறது.

காரைக்கால் அம்மையார் இறைவர் திருமேனி யைப் பார்க்கிருர். அவருடைய நீல கண்டத்தை உற்றுப் பார்க்கிருர். அதன் கரிய நிறத்தைக் கூர்ந்து பார்க்கிருர். பிறகு எம்பெருமான் திரு மார்பில் படம் எடுத்துப் படரும் பாம்பைப் பார்க்கிருர். அதன் கழுத்தும் கரியதாக இருக்கிறது. பெருமான் கழுத்திலும் கறுப்பு; பாம்பின் கழுத்திலும் கறுப்பு. இரண்டும் இப்படி இருப்பதற்கு என்ன காரணம்? ஒருகால் எம்பெருமானிடம் வருவதற்கு முன் சுத்தக் கழுத்தை உடையதாக இருந்து அவரி டம் சார்ந்தபிறகு அந்த நிறம் வந்ததோ?

காரைக்கால் அம்மையார் யோசனை பண்ணு கிருர். சிவபெருமானையே ஒரு கேள்வி கேட்கிருர். விசித்திரமான கேள்விதான். குழந்தை தன் தகப்பனுரை நோக்கிப் பலபல கேள்விகளைக் கேட் கும். அவ்வாறு காரைக்கால் அம்மையார் பெரு மானை நோக்கி இந்தக் கேள்வியைக் கேட்கிருர். 'இப்படியெல்லாம் கேட்பதில் என்ன நன்மை இருக் கிறது? சிவபெருமான் விடை சொல்லப் போகிருரா?' என்று நமக்குத் தோன்றும். எப்படியாவது இறை வரோடு உரையாட வேண்டும். அவர் விடை சொன்னுலும் சொல்லாவிட்டாலும் அம்மையார் கேட்டே விடுவார். அப்படி எத்தனையோ கேள்வி களை அவர் கேட்டிருக்கிருர். இனியும் கேட்பார்.

தனித் துண்டுகளாக வண்ணம் பூசிய கட்டைகள் சிலவற்றைக் குழந்தைகள் விளையாடுவதற்காகச் செய்து பெட்டியில் வைத்து விற்கிருர்கள். அந்தக் கட்டைகளை வெவ்வேறு வகையில் அடுக்கி வீடு மாதிரியும் கோபுரம் போலவும் வேறு வடிவங்கள் போலவும் உருவாக்கலாம். குழந்தைகள் உற்சாக மாக வைத்து விளையாடும் பண்டங்கள் அவை. அந்தக் கட்டைகளை அடுக்கி அடுக்கிப் பார்த்துக் குழந்தைகள் ஆனந்தத்தை அடைவார்கள்.

இறைவரிடம் பக்தி கொண்டவர்கள் அவருடைய நாமத்தையும் புகழையும் பலவகையில் எண்ணு வார்கள்; பேசுவார்கள். தம்முடைய மனநிலைக்கு ஏற்ப இறைவரைப் பற்றிய எண்ணங்களிலும் கற்பனைகளிலும் ஈடுபடுவார்கள். கட்டைகளைப் பலவேறு வகையில் அடுக்கி அழகு பார்த்து இன்

புறும் குழந்தைகளைப் போல, அன்பர்கள் இறை வரைப் பலபடியாக அலங்கரித்துப் பார்த்து இன்புறு வார்கள்.

''உன்னைச்சிங் காரித்து உனது அழகைப் பாராமல்
என்னைச்சிங் காரித் திருந்தேன் பராபரமே!''

என்ற தாயுமானவர் பாட்டில் இந்தக் கருத்தைக் காண்கிறோம். அன்பர்கள் இறைவரை மலர், ஆடை, அணி முதலியவற்றால் புனைந்து தரிசிப் பார்கள். தமிழ்ப் புலமையுடைய பக்தர்களோ பெருமான் புகழைப் பல வடிவத்தில் கவியாகப் பாடு வார்கள். தம்முடைய அறிவையும் கற்பனையையும் பயன்படுத்திப் பலபல பாமாலைகளைச் சூட்டுவார்கள்.

காரைக்காலம்மையார் சிவபெருமானையும் அவர் அணிந்திருக்கும் பொருள்களையும் அவர் செய்த ருளிய செயல்களையும் நினைவுகூர்ந்து பலபல வகை யான கற்பனையில் ஈடுபடுவார். இறைவருடைய செயல்களைப் பற்றி வினவுவார். அவருடைய கோலத்தைப் பற்றிய விஞக்களை விடுப்பார். தம்மு டைய புலமையையும் கற்பனையையும் இறைவரைப் பற்றிய செய்திகளில் இணைத்துப் பாடுவார். சிவ பெருமானைப் பற்றிய எண்ணங்களிலே மூழ்கிக் காலத்தைப் போக்கும் இயல்புடையவராதலின் அவருடைய எண்ணங்கள் யாவும் அப்பெருமானைச் சார்ந்தே படர்கின்றன.

காரைக்கால் அம்மையார் சிவபெருமானை வினவும் வினவாக உள்ள பாடல்களில் ஒன்றை இப்போது பார்க்கலாம்.

பெருமானுடைய திருக்கழுத்திலும் பாம்பின் கழுத்திலும் கரிய நிறத்தைக் கண்ட அம்மையார், ''இரண்டிடங்களிலும் எப்படி இந்தக் கறுப்பு வந்தது!'' என்று எண்ணமிடுகிறார். சிவபிரான் திருக்கழுத்தில் கறுப்பு அமைந்ததற்குரிய காரணம் அவர் அறிந்ததே. ஆனால் இந்தப் பாம்புக்கும் எப்படிக் கழுத்தில் கருநிறம் வந்தது?

சிவபெருமானை நோக்கி வினவத் தொடங்குகிறார். ''திருக்கழுத்தில் ஆலகால நஞ்சை அடக்கி வைத்துக்கொண்ட பெருமானே?'' என்று அவரை விளிக்கிறார்.

மிடற்றில் விடம் உடையீர்!

'உம்முடைய மார்பில் படம் விரித்து ஆடுகிறதே, அந்தப் பாம்பின் கழுத்தும் கரியதாக இருக்கிறதே! கருமை பரந்த இருளைப் போல அந்தப் பாம்பின் கழுத்தில் உள்ள வண்ணம் மிக கரியதாக இருக்கிறதே!'

மிடற்றகத்து
மைத்தாம் இருள்போலும்
வண்ணம் கரிதாலோ,
பைத்தாடும் நும்மார்பிற் பாம்பு.

'இதற்கு என்ன காரணம்? அந்தப் பாம்பு உம்முடைய கழுத்தைச் சுற்றிக் கொண்டிருக் கிறதே. அந்தக் கண்டத்தை நக்கி நக்கி அங் குள்ள விடத்தின் கறுப்பு அதன் கழுத்தில் ஏறி விட்டதோ! அதுவும் அந்த விடத்தைத் தன் கழுத்தில் கொண்டுவிட்டதோ?'

உம் மிடற்றை நக்கி
மிடற்றில் விடம் கொண்ட வாறே?

தந்தையைக் குழந்தை சில கேள்விகளைக் கேட் கும்போது அயலாருக்கு அந்தக் கேள்வி பைத்தியக் காரத்தனமுடையதாகத் தோன்றும். ஆனால் தந்தைக்கோ தன் குழந்தை தன்னை அன்போடு கேட்கிறதே என்ற மகிழ்ச்சியே உண்டாகும். அம்மையாரும் குழந்தை போன்ற மன நிலையில் இருந்து தம்மை ஆண்டருளிய தந்தையைக் கேட்கிறார்.

மிடற்றில் விடம்உடையீர், உம்மிடற்றை நக்கி
மிடற்றில் விடம்கொண்ட வாறே,—மிடற்றகத்து
மைத்தாம் இருள்போலும் வண்ணம் கரிதாலோ
பைத்தாடும் நும்மார்பில் பாம்பு.

[திருக்கழுத்தில் ஆலகால நஞ்சை உடைய எம் பெருமானே, உம்முடைய திருமார்பில் படம் எடுத் தாடும் பாம்பு, தன் கழுத்தில் கருமை பரவிய இருள் போல நிறம் கரியதாக இருக்கிறது; அது உம்மு டைய திருக்கழுத்தை நக்கி அங்குள்ள விடத்தைத் தன் கழுத்திலும் கொண்ட வண்ணமோ இது?

விடம்—ஆல கால நஞ்சு. பாம்பு கழுத்தைச் சுற்றிக் கொண்டிருப்பதனால் இறைவர் திருக் கழுத்தை நக்கும் வாய்ப்பைப் பெற்றது. கொண்ட வாறே—கொண்ட விதமோ? 'வண்ணம்' 'பாம்பு கொண்டவாறே' என்று முடிக்க வேண்டும். மை தாம்—கருமை பரவிய; மைத்து ஆம்—கரியதாகிய என்றும் பொருள் கொள்ளலாம். வண்ணம் இருள் போலும் கரிது. ஆல், ஓ: அசைகள். பைத்து—படம் எடுத்து. பாம்பு கரிது, கொண்டவாறே என்று முடிக்க.]

அற்புதத் திருவந்தாதியில் 66-ஆம் பாடல் இது. *



கல்வியும் சமுதாயமும்

சுவாமி விவேகானந்தர்

1

நீதிநூல்கள் எப்போதும் 'நான் அல்லேன், நீயே' என்று சொல்லுகின்றன. அவற்றின் இலட்சியம் 'சுயநலம்' அல்ல, 'சுயநலமின்மை' என்பதே ஆகும்.

ஒருவன் புலன்களின் மூலம் எல்லையற்ற ஆற்றலையோ, முடிவில்லாத பேரின்பத்தையோ அடைவதற்கு முயற்சி செய்யும்போது, அவன் தன் குறுகிய இயல்பை விடாமல் பற்றிக்கொண்டிருக்கிறான். வீணான இந்த இயல்பை நாம் கைவிட வேண்டும்—இதையேதான் நீதிநூல்கள் கூறுகின்றன.

'நானே முதலில் இருக்க வேண்டும்' என்று புலன்கள் கூறுகின்றன. 'நான் கடைசியில் வைக்கப்பட வேண்டும்' என்று நீதிநூல்கள் கூறுகின்றன. இந்தத் தியாகத்தின் அடிப்படையில்தான் எல்லா நீதிநூல்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இலௌகிக உலகில் உள்ள 'நான்' என்னும் குறுகிய நினைவை வளரவொட்டாமல் அழிக்கும் முறையில் தான் நீதிநூல்கள் இயற்றப்பட்டிருக்கின்றன.

அகண்டமான மெய்ப்பொருள் இந்த இலௌகிக உலகில் ஒருபோதும் வெளிப்படுவதில்லை. அவ்விதம் வெளிப்படுவதற்குச் சாத்தியமும் இல்லை. அது அப்படி வெளிப்படும் என்று நாம் நினைத்துப் பார்க்கவும் வழி இல்லை.

2

மக்கள் ஏன் ஒழுக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை இலௌகிகப் பயன்களை மட்டும் குறிக்கோளாகக் கொண்டவர்களின் கருத்துக்களால் விளக்கிக் காட்ட முடியாது. ஏனென்றால், முதலாவதாக, அப்படிப்பட்டவர்களின் மனப்பான்மையிலிருந்து எந்தவிதமான ஒழுக்க நெறியையும் நாம் பெற முடியாது. மெய்ப்பொருளை நாடிச் செல்லும் நமது முயற்சியும், புலன்களுக்கும் அப்பாற்பட்ட நிலையை அடைவதற்கு மேற்கொள்ளும் முயற்சியும் ஆகிய இவை நடைமுறை வாழ்வுக்கு ஒத்து வராதவை; அசட்டுத்தனமானவை; அவற்றை நாம் புறக்கணித்துக் கைவிட்டுவிட வேண்டும் என்று அவன் விரும்புகிறான்.

ஆனால் அதே மூச்சில் அவன், நம்மை நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிக்கும்படியும் உலகிற்கு நன்மை செய்யும்படியும் கூறுகிறான். உலகத்திற்கு நாம் ஏன் நன்மை செய்ய வேண்டும்? நன்மை செய்வது இரண்டாவதாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். முதலில் நமக்கென்று ஓர் இலட்சியம் இருந்தாக வேண்டும். ஒழுக்கமாக இருப்பதே நம்முடைய இலட்சியத்தின் முடிவல்ல, மாறாக, அது ஓர் இலட்சியத்தை அடையச் செய்யும் பாதையாக மட்டும்தான் இருக்கிறது.

முடிவான இலட்சியம் என்ற ஒன்று இல்லாமற் போனால், நாம் ஏன் ஒழுக்கமானவர்களாக இருக்க வேண்டும்? நான் எதற்காக மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும்? நான் ஏன் மற்றவர்களுக்குக் கெடுதல் செய்யக் கூடாது? இன்பமாக இருப்பதுதான் மக்களுடைய இலட்சியம் என்றால், நான் என்னை மகிழ்ச்சியாக வைத்துக்கொண்டு மற்றவர்களை ஏன் துன்பத்தில் ஆழ்த்திவிடக் கூடாது? அப்படிச் செய்வதிலிருந்து என்னை எது தடுத்து நிறுத்துகிறது?

இரண்டாவதாக, இலௌகிகப் பயன் வேண்டும் என்ற அடிப்படை மிகவும் குறுகலானது. இப்படிப்பட்டவர்களின் கருத்துக்கள் தற்காலச் சமுதாயத்தின் சூழ்நிலைகளில் மட்டும்தான் வேலை செய்ய

முடியும். இந்தச் சூழ்நிலைகளைக் கடந்து, அப்பால் அந்தக் கருத்துக்களுக்கு எந்தவித மதிப்பும் கிடையாது. ஆனால் மதம், ஆன்மிக வாழ்க்கை ஆகியவற்றிலிருந்து பெறப்படும் ஒழுக்கம், நீதி ஆகிய இவை பரந்த மனிதகுலம் முழுவதிலும் புகுந்து நற்செயலாற்ற முடியும். அது ஒரு தனி மனிதனை எடுத்துக்கொள்கிறது. என்றாலும், அதனுடைய தொடர்புகள் அனைத்தும் அகண்டமான மெய்ப்பொருளோடு தொடர்பு கொண்டவையே ஆகும். ஏனென்றால், சமுதாயம் என்பது இத்தகைய தனி மனிதர்கள் பலருடைய ஒரு தொகுப்பே தவிர வேறு இல்லை.

3

கீழ்த்தரமான தந்திரங்களால் இந்த உலகிலே மகத்தான காரியம் எதையும் சாதித்து விடமுடியாது. இது என் உறுதியான நம்பிக்கை.

4

எவன் ஒருவன் தன்னைக் குறித்து மிதமிஞ்சிய எச்சரிக்கை உள்ளவனாக இருக்கிறானோ, அத்தகையவன் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் ஆபத்துக்கு ஆளாகிறான். யார் ஒருவன் தனக்கு உள்ள கௌரவமும் மரியாதையும் போய்விடுமோ என்று பயந்தபடி இருக்கிறானோ அத்தகையவன் அவமானத்தைத்தான் அடைகிறான். நஷ்டம் வந்துவிடுமோ என்று எவன் ஒருவன் எப்போதும் பயந்துகொண்டே இருக்கிறானோ அத்தகையவன் எப்போதும் நஷ்டத்தையே அடைகிறான். இவற்றை எனது வாழ்க்கையில் நான் பார்த்திருக்கிறேன்.

5

வாழ்க்கையில் நான் செய்ய வேண்டிய பணி என்ன என்பது எனக்குத் தெரியும். ஒரு குறிப்பிட்ட பிரிவினரிடம் அதிகப் பற்றும், வேறு ஒரு பிரிவினரிடம் தீவிர வெறுப்பும் கொண்டிருப்பது என்பதும் என்னிடம் இல்லை. நான் இந்தியாவிற்கு எந்த அளவுக்குச் சொந்தமானவனோ, அதே அளவுக்கு உலகம் முழுவதற்கும் சொந்தமானவன்... படித்த இந்துக்களிடையே நீ காணும் அந்தச் சாதிவெறி பிடித்த, மூடநம்பிக்கை கொண்ட, இரக்கமற்ற, போலித்தனம் மிக்க, நாத்திக மனம் கொண்ட, கோழைகளில் ஒருவனாக வாழ்ந்து இறந்துபோவதற்காகப் பிறந்தவன் என்று என்னை நீ நினைக்கிறாய்? கோழைத்தனத்தை நான் வெறுக்கிறேன். கோழைகளுடனோ அல்லது அர்த்தமற்ற அரசியலுடனோ எனக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லை. கடவுளும் உண்மையும்தான் இந்த உலகிலுள்ள ஒரே அரசியலாகும். மற்றவை எல்லாம் வெறும் குப்பைதான்.

6

ஆன்மிக வாழ்க்கையில் நான் பேரின்பம் பெறாமற்போனால் அதற்காகப் புலனின்ப வாழ்க்கையிலா திருப்தியை நாடுவேன்? எனக்கு அமுதம் கிடைக்காமற்போனால் அதற்காகச் சாக்கடை நீரையா நாடிச் செல்வேன்?

7

நீயே தூய்மை பொருந்தியவன். ஓ மாபெரும் வீரனே! கண்விழித்து எழுந்திரு. இந்த உறக்கம் உனக்குப் பொருந்தாது. விழித்துக்கொள். எழுந்து நில். இந்த உறக்கம் உனக்கு ஏற்றதல்ல. துன்பப்படுபவனாகவும் பலவீனனாகவும் உன்னை நீ நினைக்காதே. எல்லாம் வல்ல ஆற்றல் படைத்தவனே, விழித்தெழுந்து உன் இயல்பை நீ வெளிப்படுத்து. உன்னை நீயே பாவி என்று நினைப்பது உனக்குப் பொருந்தாது. உன்னை நீயே பலவீனன் என்று நீ கருதுவதும் உனக்குப் பொருந்தாது. இந்த உண்மையை உலகிற்கு எடுத்துச் சொல். உனக்கும் சொல்லிக்கொள். அப்போது உன் வாழ்க்கையில் ஏற்படும் விளைவை நீ கவனி. மின்னல் வேகத்தில் எப்படி எல்லாம் மாறிவிடுகிறது என்பதைப் பார். பின்பு அந்த உண்மைகளை மனிதகுலத்திற்கு எடுத்துச் சொல். அதன் மூலம் மக்களுக்கு அந்த உண்மைகளின் ஆற்றலை எடுத்துகாட்டு.

8

*உன்னைப் போன்ற மக்களிடம்தான் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். என் சொற்களின் உண்மையான கருத்தைப் புரிந்துகொண்டு, அந்த ஒளியில் உன்னைச் செயலில் ஈடுபடுத்திக்கொள். உனக்கு நான் போதுமான அளவுக்கு அறிவுரைகளை வழங்கியிருக்கிறேன். இப்போது அதில் சிறிதளவாவது செயலுக்குக் கொண்டுவா. என் அறிவுரைகளைக் கேட்டதன் பயனாக வாழ்க்கையில் நீ வெற்றியைப் பெற்றாய் என்பதை உலகம் புரிந்து கொள்ளட்டும்.

* கடந்த இரண்டரை ஆண்டுகளாக விவேகானந்தரின் கருத்துக்கள் விஜயத்தில் சில தலைப்புகளின் கீழ் பொன்மொழிகள் போன்று அவ்வப்போது வெளியிடப் பெற்றன. இவை 'Vivekananda: His call to the Nation' என்ற ஆங்கில நூலின் தமிழாக்கமாகும். இந்த இதழுடன் அந்த நூல் முழுவதும் விஜயத்தில் வெளிவந்து விட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

செய்திகள்

ஜூலை 8, ஆகஸ்ட் 5 ஆகிய இரண்டு நாட்களும் ஆற்காட்டிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண - விவேகானந்த மன்றத்தில் ஸ்ரீமத் சுவாமி ராகவேசானந்தர் அவர்கள் 'ஸ்ரீமத் பகவத்கீதை' என்னும் தலைப்பில் சிறப்புச் செற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

• • •

ஜூலை 9 ஆம் நாள் மயிலை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் குருபூர்ணிமா வழக்கம்போல் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்று இரவு ஆரதிக்குப் பிறகு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சுமார் 500 பக்தர்கள் கலந்துக் கொண்டனர். இவர்களில் பெரும்பாலோர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் முறைப்படி மந்திரதீட்சைப் பெற்றவர்கள். குழுமியிருந்த பக்தர்களுக்கு ஸ்ரீமத் சுவாமி தபஸ்யானந்த மகராஜ் அவர்கள் 'குருபூர்ணிமா' குறித்து உரையாற்றினர். விழாவிற்கு வந்திருந்த பக்தர்கள் அனைவரும் அன்றிரவு மடத்தில் பிரசாதம் எடுத்துக் கொண்டனர்.

• • •

ஸ்ரீவில்லிபுத்தூரில் கடந்த இருபத்திரெண்டு ஆண்டுகளாக பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜயந்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு திரு கந்தசாமி, பி. ஏ. பி. எல்., திரு மயிலப்பிள்ளை, திரு ரங்கநாதன் ஆகியோர் முன்னின்று விழாவை நடத்தினர். ஜூலை 13, 14, 15 ஆகிய தேதிகளில் இந்த ஆண்டு விழா நடைபெற்றது. விழாவின் முதல் நாளாகிய 13 ஆம் நாள் இரவு 7 மணிக்கு ஸ்ரீமத் சுவாமி தன்மயானந்தரும் ஸ்ரீமத் சுவாமி கமலாத்மானந்தரும் முறையே ஞானயோகம் பக்தியோகம் குறித்து பகவான் ஸ்ரீராமகிஷ்ணரின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு உரையாற்றினர். 14ஆம் நாள் இரவு 8 மணிக்கு ஸ்ரீமத் சுவாமி தன்மயானந்தர், ஸ்ரீமத் சுவாமி கருணானந்தர் ஆகியோர் முறையே அன்னை ஸ்ரீ சாரதாதேவியாரைக் குறித்தும் ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் குறித்தும் உரை நிகழ்த்தினர். 15ஆம் நாள் காலை 9-30 முதல் பகல் 1 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் 6 மணி வரையிலும் ஸ்ரீமத் சுவாமி கமலாத்மானந்தர் அவர்கள் அந்தர்யோகம் நடத்தினர்கள். விசேஷ பூஜை, ஹோமம், பஜனை ஆகியவையும் விழாவின் முக்கிய அங்கங்களாக இடம் பெற்றிருந்தன.

• • •

ஜூலை 15 ஆம் இரவு மணி 8–15 க்கு சிவகாசியில் 'ஸ்ரீ சுவாமிஜி சன்மார்க்க பேரவை'யின் சார்பில் சிவன் கோவிலில் ஸ்ரீமத் சுவாமி தன்மயானந்தர் 'உபநிஷத உண்மைகள்' என்னும் தலைப்பில் பேசினர். மறுநாள் இரவு அதே நேரத்தில் 'ஆன்மிக வாழ்க்கை' என்னும் தலைப்பில் ஸ்ரீமத் சுவாமி கமலாத்மானந்தர் உரை நிகழ்த்தினர்.

• • •

ஜூலை 21 ஆம் நாள் ஸ்ரீமத் சுவாமி ராமகிருஷ்ணானந்தரின் ஜயந்தி விழா விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. அன்று விடியற்காலை 5 மணி முதல் 12-30 வரை விசேஷ பூஜை, பஜனை, ஹோமம், பிரசாத விநியோகம் ஆகியவை நடைபெற்றன. அன்று இரவு ஆரதிக்குப் பிறகு ஸ்ரீமத் சுவாமி தபஸ்யானந்தஜி மகராஜ் அவர்களும், திரு 'அண்ணா' சுப்ரமண்யம் அவர்களும் 'சுவாமி ராமகிருஷ்ணானந்தரின் வாழ்வு - வாக்கு' குறித்து உரை நிகழ்த்தினர்.

ஜூலை 22 ஆம் நாள் ஞாயிறு மாலை 5-30 மணி முதல் 7-15 வரை ஸ்ரீமத் சுவாமி ராமகிருஷ்ணானந்தரின் ஜயந்தி விழாவை முன்னிட்டு பொதுக்கூட்டம் நடை பெற்றது. ஸ்ரீமத் சுவாமி கபீரானந்தர் அவர்களும் கே. ஆர். வாசுதேவன் அவர்களும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் நேர் சீடராகிய ஸ்ரீமத் ராமகிருஷ்ணானந்த சுவாமிகளின் பெருமைகளை விளக்கிப் பேசினர்.

• • •

ஆகஸ்ட் 14 ஆம் நாள் மயிலை, ஸ்ரீராமகிஷ்ண மடத்தில் மாலை ஆரதிக்கு பிறகு கோகுலாஷ்டமியை முன்னிட்டு கீதைப் பாராயணம், விசேஷ பூஜை, பஜனை ஆகியவை நடந்தேறின. ஆகஸ்ட் 19 ஆம் நாள் மாலை ஸ்ரீகிருஷ்ண ஜயந்தியை முன்னிட்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஸ்ரீமத் சுவாமி கபீரானந்த மகராஜ் அவர்களும், டாக்டர் என். வீழிநாதன் அவர்களும் 'ஸ்ரீகண்ணபிரான் வாழ்வு - வாக்கு' தரும் போதனைகள் பற்றி சொற்பொழிவாற்றினர்.

*

புதிய புத்தகங்கள்

ஸ்ரீ ராமகிருஷ்ண உபதேச ஸாஹஸ்ரீ

சம்ஸ்கிருத மூலமும் இந்தி உரையும்

[ஆசிரியர்: சுவாமி அபூர்வானந்தர்; வெளியீட்டோர்: ஸ்ரீ ராமகிருஷ்ண அத்வைத ஆசிரமம், வாராணசி—221001, பக்கம்: 284+14+24, விலை ரூ. 10]

இந்த நூல் வெளியிடுவதற்குத் தூண்டுதலாக இருந்த வரலாறு ஒன்று உண்டு. ஸ்ரீராமகிருஷ்ணருடைய முக்கியச் சீடர்களில் ஒருவரும், மகா புருஷர் என்று புகழ் பெற்றவருமாகிய சுவாமி சிவானந்தர் ஒருசமயம் பின்வருமாறு கூறினார்: ''சசிமகராஜ் (சுவாமி ராமகிருஷ்ணானந்தர்) சம்ஸ்கிருதத்தில் வல்லவர். குருதேவருடைய உபதேச மொழிகளைப் பண்டைக் காலத்து மதநூல்களைப் போலவே சம்ஸ்கிருதத்தில் வெளியிடவேண்டும் என்பது அவருடைய ஆவல். அவ்விதமே எளிய நடையில் சுலோக வடிவில் எழுதி 'வித்யோதயம்' என்ற பத்திரிகையில் 1896-இல் சம்ஸ்கிருத வியாக்கியானத்துடனும் ஆங்கில உரையுடனும் வெளியிடத் தொடங்கினார். ஆனால் அதற்குப் பிறகு, சுவாமி விவேகானந்தரின் விருப்பப்படி சென்னையில் இராமகிருஷ்ண இயக்கத்தை ஆரம்பிக்க விரைவிலேயே அவர் புறப்பட்டு விட்டதனால், இந்த முயற்சி அத்துடன் நின்றுவிட்டது. அவர் எழுதியதை நாங்கள் பலமுறை படித்தும் கேட்டும் ஆனந்தமடைந்திருக்கிறோம்.''

இந்த வரலாற்றை உணர்ந்திருந்த சுவாமி அபூர்வானந்தருக்கு, சசிமகராஜ் செய்த சங்கல்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. ஸாஹித்யாசார்ய த்ரியம்பக சர்மா என்பவரின் உதவியுடன் இந்த நூலை எழுதி, கோபாலசந்தர சக்ரவர்த்தி என்பவர் செய்த இந்தி மொழிபெயர்ப்பையும் சேர்த்து, அழகாக அச்சிட்டுப் பிரசுரித்திருக்கிறார்.

இதில் 1200 சுலோகங்களில், 18 அத்தியாயங்களாக வகுக்கப்பட்டு, ஸாகாரமும் நிராகாரமும், சாஸ்திரமும் பாண்டித்யமும், அவதார தத்துவம், தியாகம், சன்னியாச தர்மம், இல்லற தர்மம், ஞானயோகம், கர்மயோகம், பக்தியோகம், ஈச்வர தரிசனம், சர்வ சமய சமரசம் முதலிய தலைப்புகளில் உபதேசங்கள் கோவையாகத் தரப்பட்டுள்ளன.

ஆதிசங்கரர் எழுதிய நூல்களுள் 'உபதேச ஸாஹஸ்ரீ' நூலும் ஒன்று. 'ஸ்ரீராமகிருஷ்ண உபதேச ஸாஹஸ்ரீ' என்னும் இந்த நூலும் ஆதி சங்கரரின் நூலைப் போலவே ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேசங்களின் சாரமாக விளங்குகிறது. இந்த நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு மொழி பேசப்பட்டாலும் இந்து மதத்தை நாடெங்கும் பரப்புவதற்குப் பண்டைக்காலம் தொடங்கிக் கையாளப்பட்ட பொதுவான ஒரே மொழி சம்ஸ்கிருதம். சங்கரர், ராமானுஜர், மத்வர், சைதன்யர் போன்ற மதாசாரியர்கள் அனைவரும் தமது உபதேசங்களை சம்ஸ்கிருதத்தில்தான் எழுதி நிலைநாட்டியுள்ளார்கள். அந்தக் காரணத்தால், நவயுக அவதார புருஷராகிய பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் அருள்மொழிகளும் சம்ஸ்கிருதத்தில் மற்றப் புராதன மதநூல்களின் வரிசையில் சேர்க்கப்படுவது பொருத்தமேயாகும்.

பரம்பொருளை அனுபூதியில் உணர்ந்த ரிஷிகளின் மூலம் வெளிவந்த வேதகாலத்தைச் சேர்ந்த உபநிஷதங்களுக்குள்ள பெருமை, நமது காலத்தில் அவதரித்து இந்து மதத்திற்குப் புத்துயிரளித்த குருதேவரின் உபதேசங்களுக்கும் உண்டு என்று ராஜாஜி போன்றவர்கள் எண்ணி, அவருடைய உபதேசங்களை 'ராமகிருஷ்ண உபநிஷதம்' என்ற பெயரில் வெளியிட்டிருக்கிறார்கள். சுவாமி விவேகானந்தர் உபநிஷதங்களைப்பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்கள் ஸ்ரீராமகிருஷ்ணருடைய உபதேசங்களுக்கும் முற்றிலும் பொருந்தும். ''இவை அளவற்ற பலத்தைக் கொடுக்கும் சுரங்கங்களாக இருக்கின்றன. உலகம் முழுவதற்கும் வலிமை அளிக்க கூடிய சக்தி அவற்றுக்கு இருக்கிறது. அவற்றின் மூலம் உலகம் முழுவதற்கும் புத்துயிரும் புதுச்சக்தியும் அளிக்க முடியும். எல்லா மதங்களையும் சேர்ந்த பலவீனர்களையும், தாழ்ந்தப்பட்டவர்களையும், துன்பத்தில் அழுந்தியவர்களையும் அவை பேரிகை கொட்டி அழைத்து, 'ஆண்மையுடன் எழுந்துநின்று விடுதலை அடையுங்கள்' என்று உரக்கக் கூவுகின்றன. விடுதலை—பூரண சுதந்திரம் உடலுக்கு, மனதுக்கு, ஆன்மாவுக்கு—இதுவே உபதேச சாரம்'' என்று விவேகானந்தர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த நூல் ஆன்மிக வாழ்க்கையை நாடும் அனைவருக்கும் ஒரு சிறந்த பொக்கிஷமாகும்.

—'அண்ணா' சுப்ரமண்யம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை - 600 004

1979 செப்டம்பர் மாத நிகழ்ச்சிகள்

ஸ்ரீ துர்க்கா பூஜை :

27-9-99 வியாழன் : ஸ்ரீ துர்க்கா சஷ்டி

28-9-79 வெள்ளி : மாலை 5-30 மணிக்கு ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை

29-9-79 சனி : மகா அஷ்டமி : காலை 8 மணிக்கு விசேஷ பூஜை

[இரவு 9-12 முதல் 9-36 வரை சாந்தி பூஜை]

1-10-79 திங்கள் : விஜயதசமி – மாலை வழிபாட்டிற்குப் பிறகு சாந்தி ஜலம் தெளித்தல்

மேலே குறிப்பிட்ட துர்க்கா பூஜை நாட்களில் ஒவ்வொரு நாளும் மாலை வழிபாட்டிற்குப் பிறகு பஜனை நடைபெறும்.

சத்சங்கம் : ஞாயிறுதோறும் மாலை 4 மணி முதல் 6-30 மணி வரை

4 மணி முதல்	1.	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் (2-9-79 & 16-9-79)
4-30 மணி வரை	2.	ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் (9-9-79 & 23-9-79)

மாலை 4-30 மணி முதல் 5-30 மணி வரை சொற்பொழிவு (தமிழ்)

2-9-79	1.	ஸ்ரீமத் பாகவதம் – திரு 'அண்ணா' சுப்பிரமணியம்
9-9-79	2.	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்—திரு வி. ஆர். கல்யாணசுந்தர சாஸ்திரிகள்
16-9-79	3.	ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்—திரு வி. எஸ். வி. குருசுவாமி சாஸ்திரிகள்
23-9-79	4.	இராமாயணம்—டாக்டர் என். வீழிநாதன்

மாலை 5-35 மணி முதல் 6-30 மணி வரை சுவாமி கபீரானந்தர் அவர்கள் ஸ்ரீமத் பகவத்கீதை என்னும் தலைப்பில் செப்டம்பர் 2, 9, 16, 23 ஆகிய தேதிகளில் ஆங்கிலத்தில் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

வாரநாட்களில் நடைபெறும் சொற்பொழிவுகள் (மாலை 5-45 மணிக்கு)

1.	திங்கள்	ஸ்ரீ ராமகிருஷ்ண கதாமிர்தம்—சுவாமி அமிர்தானந்தர்
2.	செவ்வாய்	நாரத பக்தி சூத்திரம் – சுவாமி கபீரானந்தர்
3.	புதன்	ஸ்ரீமத்பகவத்கீதை—சுவாமி தன்மயானந்தர்
4.	வியாழன்	மகாபாரதம் — திரு 'அண்ணா' சுப்பிரமணியம்
5.	வெள்ளி	ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசங்கள்—சுவாமி கமலாத்மானந்தர்

சிறப்புச் சொற்பொழிவுகள்: சனிக்கிழமைகளில் மாலை 5-45 மணிக்கு

1-9-79	1.	ஸ்ரீமத் பாகவதம்—பி. ராமகிருஷ்ணன்
15-9-79	2.	இராமாயணம்—டாக்டர் என். வீழிநாதன்

விசேஷ தினங்கள் :

23-9-79 ஞாயிறு : அந்தர்யோகம் (சாதனை தினம்)

2-9-79 மாலை 7 மணிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண நாம சங்கீர்த்தனம்

3-9-79 & 16-9-79 ஆகிய ஏகாதசி தினங்களில் மாலை வழிபாட்டிற்குப் பிறகு ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம் நடைபெறும்.

9-9-79 மாலை 7 மணிக்கு சியாம நாம சங்கீர்த்தனம்

23-9-79 மாலை 7 மணிக்கு சிவநாம சங்கீர்த்தனம்

30-9-79 மாலை 7 மணிக்கு ஸ்ரீசாரதா நாம சங்கீர்த்தனம்

14-9-79 ஸ்ரீமத் சுவாமி அபேதானந்த ஜயந்தி

21-9-79 ஸ்ரீமத் சுவாமி அகண்டானந்த ஜயந்தி

வேறு சில நிகழ்ச்சிகள்:

மாலை 6-15 மணிக்கு சுவாமி ராகவேசானந்தர் அவர்கள் 7, 14, 21, 28 ஆகிய தேதிகளில் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணமும், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் என்னும் தலைப்பில் சொற்பொழிவும் நிகழ்த்துவார்கள். இடம் : இல. 18, 9-வது லேன், சாஸ்திரி நகர்.

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொலைபேசி : 71231

தலைவர்,

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

காந்தியடிகளின் பொன்மொழிகள்



பொன்மொழிகள்

* சுருக்கமாகப் பேசுகிறவனுடைய வார்த்தைகளில் ஆழ்ந்த சிந்தனை தேங்கியிருக்கும். அவன் ஒவ்வொரு சொல்லையும் அளந்து பேசுவான். உண்மையைத் தேடிச் செல்லும் என்னைப் போன்றவர்களுக்கு மௌனம் மகத்தான உதவியைச் செய்கிறது.

* நான் பரிபூரணமானவன் என்று உரிமை கொண்டாடவில்லை. உண்மையைத் தேடிச் செல்வதில் தணியாத ஆர்வம் கொண்டவன் என்ற உரிமையைத்தான் கொண்டாடுகிறேன். உண்மை என்பது கடவுளின் மற்றொரு பெயர்தான்.

* கடவுளின் பலமும், கடவுளின் அருளுமின்றி அஹிம்ஸாவாதியால் எதையும் செய்ய முடியாது. கடவுளின் பலமும் அருளுமின்றிக் கோபமோ, பயமோ, பழிக்குப்பழி வாங்கும் உணர்ச்சியோ கொள்ளாமல் சாகிற தைரியமும் அவனுக்கு ஏற்படாது.

* ருசியை உணரும் உறுப்பாகிய நாவைக் கட்டுப்படுத்த வேண்டும். ருசியைக் கட்டுப்படுத்தாதவனால் மிருக இச்சையையும் கட்டுப்படுத்த முடியாது என்பதை அனுபவத்தில் கண்டிருக்கிறேன். ருசியை அடக்குவது எளிதான காரியமன்று. ஆனால், இச்சையை அடக்குவது ருசியை அடக்குவதோடு சம்பந்தப்பட்டுள்ளது.

* என் பொது வாழ்க்கையில் பழிக்குப் பழி வாங்கும் சக்தி எனக்குப் பல முறை கிடைத்திருந்தும் நான் அவ்விதம் செய்யவில்லை. அவ்விதம் செய்யக்கூடாது என்று நண்பர்களுக்கும் உபதேசம் செய்தேன். இந்தக் கொள்கையைப் பரப்புவதற்காகவே என் வாழ்க்கை அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது.